தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

30.08.2013

**கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை**

கடலூர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் புதன்கிழமை இரவு மழைப் பெய்யத் தொடங்கியது.இந்த மழை வியாழக்கிழமை காலை வரை நீடித்தது. ஒரு நாள் இரவு மட்டும் பெய்த மழையின் அளவு சராசரியாக 8 சென்டிமீட்டராக பதிவானது.

கடலூர் மாவட்ட மழையளவு விவரம் (மி.மீ.):

தொழுதூர் 107, வேப்பூர் 85.4, கீழ்செறுவாய் 85, விருத்தாசலம் 77, பெலாந்துரை 74, மே.மாத்தூர் 69, காட்டுமயிலூர் 60, அண்ணாமலைநகர் 40.8, கொத்தவாச்சேரி 28, பரங்கிப்பேட்டை 23, சிதம்பரம் 20, கடலூர் 10.4, புவனகிரி 8, காட்டுமன்னார்கோவில், லால்பேட்டை 7.

**மாவட்டத்தில் பரவலாக மழை**

கடலூர் மாவட்டத்தில் தொடர்ந்து பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் பெரும்பாலான பகுதிகளில் புதன்கிழமை இரவு மழைப் பெய்யத் தொடங்கியது.இந்த மழை வியாழக்கிழமை காலை வரை நீடித்தது. ஒரு நாள் இரவு மட்டும் பெய்த மழையின் அளவு சராசரியாக 8 சென்டிமீட்டராக பதிவானது.

விவசாயப் பணிகள் தொடங்கவுள்ள சமயத்தில் பெய்த மழையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கடலூர் மாவட்ட மழையளவு விவரம் (மி.மீ.):

தொழுதூர் 107, வேப்பூர் 85.4, கீழ்செறுவாய் 85, விருத்தாசலம் 77, பெலாந்துரை 74, மே.மாத்தூர் 69, காட்டுமயிலூர் 60, அண்ணாமலைநகர் 40.8, கொத்தவாச்சேரி 28, பரங்கிப்பேட்டை 23, சிதம்பரம் 20, கடலூர் 10.4, புவனகிரி 8, காட்டுமன்னார்கோவில், லால்பேட்டை 7, சேத்தியாத்தோப்பு 5.2, ஸ்ரீமுஷ்ணம் 4, வானமாதேவி 2.8. கடலூர் மாவட்ட மொத்த மழையளவு 782.80மி.மீ. சராசரி மழையளவு 37.28 மி.மீ.

**பயிர் அறுவடை சோதனை தளங்களில் ஆய்வு**

பயிர் அறுவடை சோதனைத் தளங்களில் வேளாண்மைத் துணை இயக்குநர் ஆய்வு மேற்கொண்டார்.

பயிர் சாகுபடியில் உற்பத்தி திறனைக் கணக்கிட ஆண்டுதோறும் குறிப்பிட்ட பருவங்களில் வேளாண், புள்ளியியல் மற்றும் வருவாய்த் துறையினர் இணைந்து பயிர் அறுவடை  சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

புள்ளியியல் துறை வழங்கும் புல எண்களின் அடிப்படையில், வருவாய்த் துறை கிராமக் கணக்கு அடங்கலின்படி வேளாண் துறையால் சோதனைத் தளங்கள் தேர்வு செய்து கண்காணித்து அறுவடை கணக்கீடு செய்யப்படுகிறது.

நடப்பு சொர்ணவாரி பட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெற்பயிருக்கு கடலூர் வட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள தென்னம்பாக்கம் மற்றும் நாகப்பனூர் கிராமங்களில் அமைந்துள்ள சோதனைத் தளங்களை வேளாண் துணை இயக்குநர் இளங்கோ ஆய்வு செய்தார்.அப்போது வேளாண் அலுவலர் பூவராகவன், உதவி வேளாண் அலுவலர் சிவமணி ஆகியோர் உடனிருந்து உயிரியல் அளவீடுகளை மேற்கொண்டனர்.

அதில், நாகப்பனூர் கிராமத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல் வயலில் காணப்படும் பச்சைப் பாசிகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 250 கிராம் மயில் துத்தத்தை நன்று தூளாக்கி மணலுடன் கலந்து தூவ பரிந்துரை செய்யப்பட்டது.

**இயந்திரம் மூலம் களை எடுப்பதால் செலவு குறைகிறது**

வேளாண் துறை மானிய விலையில் வழங்கிய பவர் வீடார் இயந்திரத்தைப் பயன்படுத்தி, களை எடுப்பதால் கூலிச் செலவு குறைந்து கூடுதல் லாபம் கிடைப்பதாக அரசு திட்டப் பயனாளி கூறினார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் வேளாண் துறை, தோட்டக் கலைத் துறை வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத் துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளில் தமிழக முதல்வரின் இரண்டாம் பசுமை புரட்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் மற்றும் சலுகைகள், திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் ஒரு அங்கமாக களை எடுக்கும் கருவியான பவர் வீடார் இயந்திரம் விவசாயிகளுக்கு மான்ய விலையில் வழங்கப்பட்டுள்ளது. விவசாய கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள இந்த காலத்தில் நவீன வேளாண் தொழில் நுட்ப கருவிகளை விவசாயிகளுக்கு வழங்குவதன் மூலம் விவசாயிகள் அதிகளவில் பயன்பெறுகின்றனர்.

அரசு வேளாண் திட்டத்தில் பவர் வீடார் இயந்திரத்தைப் பெற்ற ஈக்காடு கண்டிகை கிராமத்தில் சம்பங்கி பயிரிடும் விவசாயி பிரசாத் கூறியது:

ரூ. 16 ஆயிரம் மதிப்பிலான பவர் வீடார் என்னும் களை எடுக்கும் இயந்திரத்தை வேளாண் துறை மூலம் 50 சதவீத மான்யத்தில் ரூ. 8 ஆயிரத்துக்கு பெற்றேன். இந்த இயந்திரம் மூலம் பயிர்களுக்கு இடையே 1 மணி நேரத்தில் முக்கால் ஏக்கர் பரப்பளவில் களையை நீக்கலாம். 12 பேர் செய்யக்கூடிய பணியை இந்த இயந்திரம் மூலம் ஒரு நபரே செய்து முடிக்க முடிகிறது.

இதன் மூலம் கூலி ஆட்களை வைத்து களை எடுக்கும் செலவான (ஒரு நாளுக்கு ரூ. 2 ஆயிரம்) மிச்சமாகிறது. இந்த இயந்திரத்தை பெட்ரோல் போட்டு பயன்படுத்தி களை எடுத்தால் ஒரு நாளைக்கு ரூ. 500 மட்டும் செலவாகிறது என்றார்.

கிளாம்பாக்கம் கிராமத்தில் பவர் வீடார் என்ற களை எடுக்கும் டிராக்டரை அரசு மான்ய விலையில் பெற்ற விவசாயி ராமலிங்கம் கூறும்போது: இக் கருவியின்

மதிப்பு ரூ. 3 லட்சத்து 6 ஆயிரத்து 600 ஆகும். அரசு மானியமாக ரூ. ஒரு லட்சத்து 25 ஆயிரம் வழங்கப்பட்டது.

சுமார் 5 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் இந்த மினி டிராக்டரைப் பயன்படுத்தி வாழை, மல்லி, நெல் ஆகிவற்றை பயிரிடலாம். இக் கருவியின் உதவியுடன் நிலத்தை உழுதல், சமன்படுத்துதல், களை எடுத்தல் ஆகிய பணிகளை செய்ய முடியும். இந்த கருவி ஏழைகளுக்கு வரப்பிரசாதம் என்றார்.

விவசாயிகளின் சந்திப்பின் போது வேளாண்மை இணை இயக்குநர் என்.சுந்தர், துணை இயக்குநர் கே.பாபு, வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ப.ஆதித்தன், தோட்டக் கலை துணை இயக்குநர் ஜி. நவநீத கண்ணன், வேளாண்மை துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) எம். லேபாகிஸ்வர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நத்தம் பகுதியில் அதிகபட்சமாக84 மி.மீ. மழை பதிவு**

திண்டுக்கல் மாவட்டத்தில் புதன்கிழமை பரவலாக மழை பெய்தது. இதில், அதிகபட்சமாக நத்தத்தில் 84 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. மேலும், மானாவாரி நிலங்களில் ஆடி மாதம் தொடங்க வேண்டிய வேளாண் பணிகள் போதிய மழை இல்லாததால், இதுவரை தொடங்கப்படவில்லை.

இந்நிலையில், புதன்கிழமை மாலை முதல் நள்ளிரவு வரை மாவட்டத்தின் பல இடங்களிலும் பரவலாக மழை பெய்தது. இதில், நத்தம் பகுதியில் அதிகபட்சமாக 84 மி.மீட்டர் மழை பதிவானது.

மாவட்டத்தின் பிற இடங்களில் பதிவான மழை விவரம்(மி.மீட்டரில்) வருமாறு: திண்டுக்கல் - 4.9, கொடைக்கானல் - 11.6, கொடைக்கானல் போட் கிளப் - 14.75, நிலக்கோட்டை - 15.4, பழனி - 2, வேடசந்தூர் புகையிலை மையம் - 35.05,

காமாட்சிபுரம் - 6.7 என மொத்தம் 174.40 மி.மீட்டர் மழை மாவட்டம் முழுவதும் பதிவாகியுள்ளது.

மழை தொடர்ந்து பெய்யுமானால், வேளாண் பணிகளை விரைவில் தொடங்க முடியும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**உணவு பதனிடல் தொழில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

சென்னையில் தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் தொழில் முனைவோருக்கு உணவு பதனிடுதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் குறித்து 6 வார கால இலவச பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: உணவு பதனிடுதல் மற்றும் மதிப்புக் கூட்டுதல் பயிற்சியில் சேர குறைந்தபட்சம் பிளஸ் 2 தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 18 முதல் 45 வயதுக்கு உள்பட்ட ஆண் மற்றும் பெண்கள் பயிற்சியில் சேரலாம்.

பயிற்சியில் சேர விரும்பும் தொழில் முனைவோர், தமது பெயர், முகவரி, செல்போன் எண், மின் அஞ்சல் உள்ளிட்ட விபரங்களுடன் இயக்குநர், தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், டி.ஐ. கட்டடம், கிண்டி, சென்னை-32 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்துடன் கல்வி, வயது, ஜாதி ஆகியவற்றுக்கான சான்றிதழ் நகல், பாஸ்போர்ட் அளவில் உள்ள புகைப்படம் ஆகியவற்றை இணைக்க வேண்டும்.

ஜ்ஜ்ஜ்.ங்க்ண்ற்ய்.ண்ய் என்ற இணைய தள முகவரியில் விண்ணப்பத்தை படியிறக்கம் செய்தும் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**விருதுநகரில் பலத்த மழை**

விருதுநகரில் வியாழக்கிழமை மாலையில் கனமழை பெய்தது.

கடந்த சில நாள்களாகவே விருதுநகர் பகுதியில் வெயிலின் கடுமை அதிகமாக இருந்தது. வியாழக்கிழமை மாலை வரையில் வெயிலின் கடுமை அதிகமாகவே இருந்தது. இந்நிலையில் 6 மணி அளவில் மேகங்கள் திரண்டு கனமழை பெய்தது.

இம்மழையால் நீண்ட நாள்களுக்கு பின் தெருக்கள் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. அதேபோல், சுற்றுப்பகுதிகளில் உள்ள கழிவு நீர் வாய்க்கால்களில் இருந்து வெளியேறிய மழை நீர் அனைத்தும் விருதுநகர் பழைய பேருந்து நிலையத்திற்குள் புகுந்து தண்ணீர் தேங்கி குளம் போல் காட்சியளித்தது.

இதனால், மாலையில் வேலைக்குச் சென்ற தொழிலாளர்களும், பள்ளி விட்டு வந்த மாணவ, மாணவிகளும் பஸ் நிலையத்தில் நிற்க முடியாத நிலை இருந்தது. இந்த மழையால் கிராமப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**பவானிசாகர் நீர்மட்டம்**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 83.84 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,834 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,650 கனஅடி நீரும், வாய்க்காலில் 2,300 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 17.81 டி.எம்.சி.யாக இருந்தது.

**வறட்சியால் பாதித்த தென்னை மரங்கள் மறுகணக்கெடுப்பு**

வேலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதித்த தென்னை மரங்களுக்கான கணக்கெடுப்பு மீண்டும் தொடங்கியுள்ளது தென்னை விவசாயிகளுக்கு ஆறுதலாக அமைந்துள்ளது.

கடந்த ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை மாநிலத்தில் தென்னை விவசாயம் பாதிப்பு தொடர்பான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் வேலூர் மாவட்டத்தில் நடத்தப்பட்ட ஆய்வை அடுத்து ரூ.1.3 கோடி வறட்சி நிவாரணமாக பாதிக்கப்பட்ட தென்னை விவசாயிகளுக்கு அளிக்க நிதி ஒதுக்கப்பட்டது.

இதன் மூலம் 3 ஆயிரத்து 348 ஏக்கர் பரப்பில் தென்னை விவசாயம் செய்துவரும் பேர்ணாம்பட்டு, குடியாத்தம், நாட்டறம்பள்ளி, வாணியம்பாடி, ஆம்பூர்,

திருப்பத்தூர், ஆலங்காயம் மற்றும் ஜோலார்பேட்டை விவசாயிகள் பயன்பெற்றனர்.

இந்த இழப்பீடு தொகை ஏக்கருக்கு ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக ரூ.4 ஆயிரம் வழங்கப்பட்டது. இத்தொகை அந்தந்த விவசாயியின் கூட்டுறவுச் சங்கக் கணக்கில் சேர்க்கப்பட்டது.

ஆனால் இந்த கணக்கெடுப்பு முழுமையாக எடுக்கப்படவில்லை. இதனால் தென்னை விவசாயிகளில் பலர் இழப்பீட்டை பெற முடியவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் மாவட்ட நிர்வாகத்திடம் கோரிக்கை வைத்தனர்.

இதை மாவட்ட நிர்வாகம் அரசுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து மறுகணக்கெடுப்பு நடத்த அரசு உத்தரவிட்டது.

இதன்படி வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சுமார் 700-க்கும் மேற்பட்டோர் மாவட்டம் முழுவதும் தென்னை பயிரிடும் இடங்களில் கடந்த ஒரு வாரமாக கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த கணக்கெடுப்பு செப்டம்பர் முதல் வாரத்தில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அலுவலர்களிடம் கேட்டபோது, தற்போதைய கணக்கெடுப்பு வறட்சியாலும், பூச்சிகள் தாக்குதலாலும் 50 சதவீதத்துக்கும் குறைவான விளைச்சல் உள்ள தென்னை மரங்களுக்கு இழப்பீடு வழங்கும் வகையில் நடைபெறுகிறது.

மாவட்டத்தில் சுமார் 20 ஆயிரம் ஹெக்டேரில் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. தொடர்ந்து மழை குறைவால் ஏற்பட்ட வறட்சி, கடந்த 10 ஆண்டுகளாக தொடரும் பூச்சி, வண்டுகளின் தாக்குதலால் மாவட்டத்தில் தேங்காய் விளைச்சலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அத்துடன் காய்கள் சிறியதாக காணப்படுகின்றன. இதனால் மாவட்ட விவசாயிகள் தென்னை விவசாயத்தில் எதிர்பார்த்த வருவாயை ஈட்ட முடியாததும் காரணமாக அமைந்துவிட்டது. கணக்கெடுப்பில் இதையும் கருத்தில் கொண்டு அலுவலர்கள் செயல்படுவதாக தெரிவித்தனர்.

**பசுமைப் பண்ணைக்கு குடியாத்தம் தேங்காய்**

சென்னை மக்கள் மலிவு விலையில் காய்கறிகள் வாங்க, முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்துள்ள பசுமைப் பண்ணையில் விற்பதற்காக குடியாத்தத்திலிருந்து தேங்காய் அனுப்புமாறு கூட்டுறவுத் துறை அமைச்சர் செல்லூர் கே. ராஜு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வேலூர் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட அமைச்சர், குடியாத்தம் வட்ட வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில், சுமார் ரூ. 6 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள தேங்காயை கொப்பரையாக்கும் சூரிய ஒளி உலர்களத்தை வியாழக்கிழமை பார்வையிட்டார்.

அங்கு 500 மெட்ரிக் டன் எடையுள்ள நெல், வெல்லம், பருத்தி ஆகிய விவசாயிகளின் விளைபொருள்களை பாதுகாப்பாக வைக்கும் கிடங்கையும் அவர் ஆய்வு செய்தார். அந்த கிடங்கில் விற்பனைக்கு வைத்திருந்த 4 டன் கொப்பரையை பார்வையிட்ட அமைச்சர் விவரங்களைக் கேட்டறிந்தார்.

சென்னை விலையை ஒப்பிடுகையில், குடியாத்தத்தில் மிகவும் குறைந்த விலைக்கு தேங்காய் கிடைக்கிறது என்பதை அறிந்த அமைச்சர், சென்னையில் உள்ள பசுமைப் பண்ணையில் விற்பதற்காக தினமும் 1,500 தேங்காய்களை இங்கிருந்து அனுப்புமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து சென்னைக்கு லாரி மூலம் தேங்காய் அனுப்பும் நடவடிக்கைகளை அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர். வெள்ளிக்கிழமை முதல் தேங்காய்கள் சென்னைக்கு அனுப்பப்படும் எனத் தெரிகிறது.

பலமநேர் சாலையில் உள்ள நியாய விலைக் கடையில் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படும் அரிசி, உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு ஆகியவற்றின் தரம், எடை அளவுகளை அமைச்சர் ஆய்வு செய்தார்.

கூடுதல் கெரசின் பங்க்: குடியாத்தம் நகரில் கூடுதலாக ஒரு கெரசின் பங்க் அமைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தார்.

தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் பெ. சீதாராமன், மாவட்ட ஆட்சியர் பொ. சங்கர், மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் எஸ்.ஆர்.

வெங்கடேசன், துணைப் பதிவாளர் கே. தேவிப்பிரியா, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஏ.ஜி. விஜயன், எம்எல்ஏ கு. லிங்கமுத்து, அதிமுக மாவட்டச் செயலர் எஸ்.ஆர்.கே.அப்பு, நகர்மன்றத் தலைவர் அமுதா சிவப்பிரகாசம், ஒன்றியக் குழுத் தலைவர் லட்சுமி சுகுமாரன், சங்க மேலாண்மை இயக்குநர் சா. குமரேசன், சரக கள அலுவலர் சாந்தா, சங்கத் தலைவர் ஜே.கே.என். பழனி, செயலர் வி.ஜி. நடராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு முகாம்**

களம்பூரில் பேரூராட்சி மற்றும் அமைதி அறக்கட்டளை சார்பில் மழைநீர் சேகரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இம் முகாமுக்கு செயல் அலுவலர் இரா.செந்தில்குமார் தலைமை வகித்து பேசியதாவது: ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர் சேகரிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும், மரக்கன்றுகளை நட்டு சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டும் என்றார்.

இம்முகாமில் அமைதி அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் க.ராஜாராம் வரவேற்றார். பேரூராட்சி மன்றத் தலைவர் ராஜாராணி கலந்துகொண்டு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார்.

பேரூராட்சி உறுப்பினர்கள் அமுதா, தர்மலிங்கம், சிவலிங்கம், காசிலிங்கம், அஹமத்பாஷா, பேரூராட்சித் துணைத் தலைவர் சா.பார்த்தசாரதி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் சரவணன், செல்வி, கீதா, இளங்கோ, பாரதி, ராணி, காஞ்சனா, மணி, தாமோதரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**தருமபுரியில் பலத்த மழை**

தருமபுரி மாவட்டத்தில் வியாழக்கிழமை பரவலாக பலத்த மழை பெய்தது.

தருமபுரி மாவட்டத்தில் பருவ மழைப் பொய்த்ததால் மாவட்டத்தில் பரவலாக குடிநீர் தட்டுபாடு ஏற்படும் சூழல் ஏற்பட்டுள்ளது. நிலத்தடி நீரும் குறைந்ததால் பொதுமக்கள் குடிநீர் கிடைக்காமல் அவதிக்குள்ளாகி வருகின்றனர். விவசாயமும் பாதிக்கப்பட்டது. தென்னை, மா உள்ளிட்ட மரங்களும் நீரின்றி காயத்

தொடங்கின. கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைக்காததால், விவசாயிகள் அவற்றை விற்பனைச் செய்யத் தொடங்கினர்.

மேலும், கடந்த சில  நாள்களாக தருமபுரி மாவட்டத்தில் வெப்பத்தின் தாக்கம் சற்று அதிகமாகவே இருந்தது. இரவு நேரத்தில் வெப்பக் காற்று வீசியது.  இந்த நிலையில், வியாழக்கிழமை தருமபுரி மாவட்டத்தில் தருமபுரி, தொப்பூர், பென்னாகரம், பாலக்கோடு, அரூர், காரிமங்கலம் உள்ளிட்டப் பகுதிகளில் பரவலாக பலத்த மழை பெய்தது.

தருமபுரி நகரில் மழைநீர் வடிகால் கால்வாய்களை முறையாக பராமரிக்காததால், அடைப்புகள் ஏற்பட்டு, மழைநீர் சாலைகளில் பெருக்கெடுத்து ஓடின. பள்ளமான பகுதிகளில் மழைநீர் தேங்கின. இந்த திடீர் மழையால் வெப்பத்தின் தாக்கம் குறைந்து இரவில் குளிர்ந்த காற்று வீசியது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு இந்த மழை சாதகமாக இருக்கும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**நிலக்கடலை சாகுபடியில் அதிக மகசூல் பெற வழிமுறைகள்**

நிலக்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகள் அதிக மகசூல் பெறும் வழிமுறைகளை வெண்ணந்தூர் வட்டார வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வெண்ணந்தூர் வேளாண்மைத் துறை உதவி இயக்குநர் கு.சீனிவாசன் தெரிவித்துள்ளது:

நிலக்கடலை பயிர் நடப்பு பருவத்தில் வெண்ணந்தூர் வட்டாரத்தில் சுமார்  2,000 ஏக்கரில்  மானாவாரியாக பயிர் செய்யப்பட்டுள்ளது.  தற்போது அவைகள் 30 முதல் 45 நாள் பயிராக உள்ளன.  நிலக்கடலை பயிரில் அதிக மகசூல் பெற ஜிப்சம் மற்றும் ஊட்டச்சத்து கரைசலை தெளிக்க வேண்டும்.

ஜிப்சத்தை பயிருக்கு இடுவது மிகவும் அவசியமானதாகும்.  ஜிப்சத்தில் சுண்ணாம்புச் சத்து 24 சதவீதமும், கந்தகச்சத்து 18 சதவீதமும் உள்ளது. சுண்ணாம்புச் சத்து காய்கள் திரட்சியாகவும், அதிக எடையுடையதாகவும் உருவாக உதவுகிறது.  கந்தகச்சத்து நிலக்கடலையில் எண்ணெய் சதவிகிதத்தை அதிகரிக்கிறது.

ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சத்தை அடி உரமாகவும், 45-ஆம் நாளில் 80 கிலோ ஜிப்சத்தை மேலுரமாகவும் இடவேண்டும். செடிகளை சுற்றி ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். செடிகளை சுற்றி ஜிப்சம் இடும்போது நிலத்தில் போதிய ஈரம் இருக்க வேண்டும். மானாவாரி நிலங்களில் செடியின் வயது 35 முதல் 55 நாள் வரை இடைவெளியில் எப்போது மழை பெய்தாலும் ஜிப்சம் இட்டு மண்ணை அணைக்கலாம். சுண்ணாம்புச் சத்து உள்ள நிலங்களில் ஜிப்சம் இடுவதை தவிர்ப்பது நல்லது.

ஒரு மணிலா செடி தனது வளர்ச்சிப் பருவத்தில் 200-க்கும் மேற்பட்ட பூக்களை உற்பத்தி செய்கின்றன. பூத்த பூக்களில் பெரும்பான்மையானவை காயாகாமல் உதிர்ந்து விடுகின்றன. சுமார் 20 சதவீத பூக்களே காய்களாகின்றன. இதனால் உற்பத்தி குறைகிறது. பூக்கள் உதிராமல் இருக்க கையாளும் நல்ல யுக்தியே ஊட்டச்சத்து கரைசல் ஆகும்.

ஒரு ஏக்கருக்கு தேவையான டை-அம்மோனியம் பாஸ்பேட் ஒரு கிலோவினை இரவு முழுவதும் ஒரு குடம் தூய தண்ணீரில் ஊறவைத்து மறுநாள் காலை அதனை எடுத்து வடிகட்டி இந்தக் கரைசலுடன் பொடி செய்யப்பட்ட 400 கிராம் அம்மோனியம் சல்பேட் மற்றும் 200 கிராம் போராக்ஸ் மற்றும் 180 மில்லி பிளானோபிக்ஸ் பயிர் ஊக்கியை கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும்.

ஒரு ஏக்கருக்கு கைத்தெளிப்பானால் தெளிப்பதற்கு 200 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். ஊட்டச்சத்து கரைசல் கைத்தெளிப்பானால் மட்டுமே தெளிக்க வேண்டும். விசைத்தெளிப்பானால் தெளிக்கக் கூடாது. மேலும், தேவைப்படும் தொழில்நுட்ப தகவலுக்கு வெண்ணந்தூர் மற்றும் அத்தனூர் வேளாண்மை விரிவாக்க மையங்களை விவசாயிகள் அணுகலாம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**செப்.5-இல் நடவுமுறையில் துவரை சாகுபடி பயிற்சி**

நாற்று நடவு முறையில் துவரை சாகுபடி குறித்த இலவசப் பயிற்சி வகுப்பு நாமக்கல்லில் செப்டம்பர் 5ஆம் தேதி நடைபெறுகிறது.

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடைபெறும் இந்தப் பயிற்சி வகுப்பில் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் நாமக்கல் - மோகனூர் சாலையிலுள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் செப்டம்பர் 4ஆம் தேதிக்குள் தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு 04286 -266345, 266244, 266650 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

**பொன்னணியாறு அணையில் 68.4 மில்லி மீட்டர் மழை**

திருச்சி மாவட்டத்தில் அதிகபட்சமாக பொன்னணியாறு அணையில் புதன்கிழமை இரவு 68.40 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் பரவலாக அனைத்துப் பகுதிகளிலும் கடந்த சில தினங்களாக இரவுநேரங்களில் மழை பெய்து வருகிறது. இதில் புதன்கிழமை இரவும் பல இடங்களில் நல்ல மழை பெய்தது.

மாவட்டம் முழுவதும் வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவுகள் வருமாறு (அளவு மில்லி மீட்டரில்):

மருங்காபுரி - 62.4, கல்லக்குடி - 49.4, சமயபுரம் - 32, நந்தியாறு தலைப்பு - 28, திருச்சி நகரம் - 24.8, ஜங்ஷன் - 23.6, நவலூர் குட்டப்பட்டு - 22, திருச்சி விமான நிலையம் - 20.2, பொன்மலை - 14.8, மணப்பாறை - 10.2, தாத்தையங்கார்பேட்டை - 10, வாத்தலை அணை - 10, குப்பம்பட்டி - 10, லால்குடி - 6, முசிறி - 6, துவாக்குடி - 6, புள்ளம்பாடி - 5.4 என மழை அளவுகள் பதிவாகியுள்ளன.

மாவட்டம் முழுவதும் புதன்கிழமை இரவு மட்டும் 410.2 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஆக.30) காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு ஆட்சியர்

ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை வகிக்கிறார்.

கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண் தொடர்புடைய கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேளாண்மை தொடர்புடைய கடனுதவிகள் குறித்து நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஆக.30) காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டத்துக்கு ஆட்சியர்

ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமை வகிக்கிறார்.

கூட்டத்தில் விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் பங்கேற்று நீர்ப்பாசனம், வேளாண்மை, இடுபொருள்கள், வேளாண் தொடர்புடைய கடனுதவிகள், விவசாய மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் மற்றும் வேளாண்மை தொடர்புடைய கடனுதவிகள் குறித்து நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது

**பால் உற்பத்தியை பெருக்க அரசு தீவிரம் கோ-4 ரக புல் பயிரிட ஏக்கருக்கு ரூ. 12,000 மானியம்**

கரூர் மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க கோ-4 ரக புல் பயிரிட ஏக்கருக்கு ரூ. 12,000 வழங்கப்படுவதால், விவசாயிகள் இத்திட்டத்தின் மூலம் முழு அளவில் பயன்பெற வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

கரூர் மாவட்டத்தில் கரூர், குளித்தலை வட்டப்பகுதிகளில் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கோ-4 ரக புல் பயிரிடப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட அவர், மேலும் தெரிவித்தது:

தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரித்து வெண்மைப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கால்நடை பராமரிப்புத் துறையின் மூலம் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், பால் உற்பத்திக்கு தேவையான அனைத்து உதவிகளையும் முழு மானியத்துடன் வழங்க உத்தரவிட்டு, அதன் மூலம் பால் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒரு ஏக்கர் பரப்பளவில் கோ -4 ரக புல் பயிரிட தமிழக அரசு மாநில தீவனபுல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முழுமானியமாக ரூ. 12000-த்தை வழங்கி வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் கரூர், குளித்தலை வட்டங்களில் 2011-12 ம் ஆண்டில் 220 ஏக்கர் பரப்பளவிலும், 2012-13-ம் நிதியாண்டில் 500 ஏக்கர் பரப்பளவிலும் கோ-4 ரக புல்லை விவசாயிகள் பயிரிட்டு சாகுபடி செய்து பயன் பெற்றனர். இதன் மூலம் பால் உற்பத்தியும் பெருகியுள்ளது. 56 ஆயிரம் லிட்டர் வரை பால் கொள்முதல் செய்து வெண்மை புரட்சியை ஏற்படுத்தியுள்ளார்.

இந்தரக புல் வழங்குவதன் மூலம் கறவை மாடுகளுக்கு எதிர்ப்பு சக்தி கிடைக்கிறது. ஒவ்வொரு கால்நடையும் ஆரோக்கியமான வளர்ச்சியைப் பெற்று பால் உற்பத்தியை அதிகரிக்கிறது. தங்கள் விவசாய நில பகுதிகளின் ஓரங்கள் மற்றும் தென்னை, மா போன்ற வகை பயிரிட்ட நில பகுதிகளில் பயிரிட்டாலே போதுமானதாகும். இதற்கு பராமரிப்பு செலவு மிகவும் குறைவாகும் என்றார் ஆட்சியர்.

ஆய்வின் போது கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 113.79 அடியாக இருந்தது.**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 113.79 அடியாக இருந்தது.

அணைக்கு நொடிக்கு 7,749 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 18,998 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரி, வெண்ணாற்றில் தலா 5,000 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,704 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 1,000 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

**விவசாயிகளுக்கு நறுமணப் பயிர் சாகுபடி பயிற்சி**

பெரம்பலூர் அருகே வாலிகண்டபுரத்தில் உள்ள தந்தை ரோவர் வேளாண் கல்லூரியில், பாக்கு மற்றும் நறுமணப் பயிர்கள் மேம்பாட்டு இயக்கம், ரோவர் வேளாண் கல்லூரி சார்பில், விவசாயிகளுக்கு நறுமணப் பயிர்கள் சாகுபடி குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

தலைமை வகித்த திருச்சி மகளிர் தோட்டக்கலை மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் டி.என். பாலமுருகன் முகாமைத் தொடக்கி வைத்தார்.

கோழிக்கோட்டில் உள்ள பாக்கு மற்றும் நறுமணப் பயிர்கள் மேம்பாட்டு இயக்க உதவி இயக்குநர் பாபுலால் மீனா, வேளாண் கல்லூரி முதல்வர் ஏ.ஆர். முகமது ஹாரூன், ரோவர் கல்வி நிறுவனங்களின் உயர் கல்வி இயக்குநர் எஸ். ஸ்ரீதரன், நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி அலுவலர் என். கோதண்டபாணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பயிற்சி முகாமில், வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் ஜே. கதிரவன் வெங்காய;க் சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள், திருச்சி மகளிர் தோட்டக்கலை, ஆராய்ச்சி நிலைய உதவிப் பேராசிரியர் ஏ. ரமேஷ் மஞ்சள், கொத்தமல்லி சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள், கோவை தோட்டக்கலை ஆராய்ச்சி, மேம்பாட்டு இயக்க இணை இயக்குநர் சுரேஷ் டகாடே நறுமணப்

பயிர்களில் உற்பத்தியை அதிகரிக்கும் முறை, பெரம்பலூர் தோட்டக்கலை துணை இயக்குநர் எம். இந்திரா மிளகாய்ச் சாகுபடி, பெரம்பலூர் வேளாண் கல்லூரி பயிர் பாதுகாப்புத் துறை பேராசிரியர் ஜி. அர்ச்சுணன், திருச்சி வேளாண் கல்லூரி நோயியல் துறைப் பேராசிரியர் ஜி. கஜேந்திரன் ஆகியோர் நறுமணப் பயிர்களில் நோய் பாதுகாப்பு, தொழில்நுட்ப பயிற்சிகள் குறித்து விளக்கினர்.

பேராசிரியர் எம்.ஆர். நாராயணசுவாமி வரவேற்றார். உதவிப் பேராசிரியர் எம். முருகானந்தம் நன்றி கூறினார்.

**"விவசாயிகளுக்குரூ. 1 கோடி விதை மானியம்**

திருவாரூர் மாவட்டத்துக்கு ரூ. 1 கோடி நிதி பெறப்பட்டு விவசாயிகளுக்கு விதை மானியம் வழங்கப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன்.

திருவாரூரில் வியாழக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு தலைமை வகித்து மேலும் அவர் பேசியது:

நிகழாண்டு குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ள 18,394 ஹெக்டேரில், திருந்திய நெல் சாகுபடி 12,176 ஹெக்டேரிலும், நேரடி விதைப்பு மூலம் 274 ஹெக்டேரிலும், நடவு முறையில் 5,944 ஹெக்டேரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

இதேபோல, நிகழாண்டு 1,30,502 ஹெக்டேரில் சம்பா சாகுபடி செய்ய திட்டமிட்டு, இதுவரை 61,683 ஹெக்டேரில் நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ளது. 34,764 ஹெக்டேரில் நடவுசெய்ய, பாரம்பரிய முறையில் 2079.4 ஹெக்டேரிலும், திருந்திய நெல் சாகுபடி முறையில் 139.7 ஹெக்டேரிலும் நாற்றுவிடப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பு. மணிமாறன், வேளாண் துணை இயக்குநர் க. மயில்வாகனன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**நன்னிலத்தில் 80.4 மி.மீ. மழை**

திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் 80.4 மி.மீ மழை புதன்கிழமை பதிவானது.

திருவாரூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் பெய்த மழையளவு மில்லி மீட்டரில் வருமாறு:

வலங்கைமான் - 65.20, திருத்துறைப்பூண்டி - 62, திருவாரூர் - 41.70, குடவாசல்- 12.20, நீடாமங்கலம் - 5.20, பாண்டவையாறு தலைப்பு- 2.40, முத்துப்பேட்டை- 2.

**வெங்காய விலையைக் குறைக்க நடவடிக்கை எடுங்கள்**

வெங்காய விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கும், தில்லி அரசுக்கும் தில்லி உயர் நீதிமன்றம் வியாழக்கிழமை உத்தரவிட்டது.

இது தொடர்பாக தில்லியைச் சேர்ந்த சமூக ஆர்வலர் பூனம் ஜெயின் தாக்கல் செய்த பொதுநல மனுவை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி (பொறுப்பு) பி.டி. அகமது, நீதிபதி விபு பக்ரு ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரித்து இவ்வாறு உத்தரவிட்டுள்ளது.

பூனம் ஜெயின் தாக்கல் செய்த மனுவில், "தில்லியில் வெங்காயம் பதுக்கப்படுவதைத் தடுக்க தில்லி அரசு தவறி விட்டது. இதன் காரணமாகவும், மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து தில்லிக்கு வெங்காய வரத்து குறைவானதாலும் தலைநகரில் வெங்காய விலை அதிகரித்துள்ளது.

விலை உயர்வைக் கட்டுப்படுத்த அத்தியாவசியப் பொருள்கள் சட்டத்தின் பிரிவுகளைப் பிரயோகிக்கவும், சந்தையில் போதிய அளவில் வெங்காய விநியோகத்தை உறுதிப்படுத்தவும் சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள மத்திய அரசுக்கும், தில்லி அரசுக்கும் உத்தரவிட வேண்டும்' என கேட்கப்பட்டிருந்தது.

அந்த மனு, வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தபோது, மத்திய அரசின் சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ராஜீவ் மெஹ்ரா ஆஜராகி கூறியது:

"வெங்காய விலை, அதன் உற்பத்தி மற்றும் வரத்தின் சூழலைப் பொருத்தே அமைகிறது. ஒவ்வொரு ஆண்டும் வெங்காய விலை செப்டம்பர் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் அதிகமாகவும் ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலத்தில் சரிவடைந்தும் வருகிறது.

பொதுவாக, வெங்காயத்தின் இருப்பு ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்திற்குள் குறைந்துவிடுகிறது.

மகாராஷ்டிரா மாநிலம் வெங்காய உற்பத்தியில் முன்னிலை வகிப்பதால், தில்லிக்கு சீரான வெங்காயம் விநியோகிக்க ஏற்பாடு செய்யுமாறு அந்த மாநிலத்தை மத்திய அரசு  கேட்டுக்கொண்டுள்ளது என்று ராஜீவ் மெஹ்ரா கூறினார்.

வேளாண் அமைச்சகத்தின் நுகர்வோர் விவகாரங்கள் துறையால் தயாரிக்கப்பட்ட வெங்காய நிலவர அறிக்கையை அவர் தாக்கல் செய்தார்.

தில்லி அரசின் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் ஜுபேதா பேகம், "சில நாள்களுக்கு முன்புவரை தில்லியில் வெங்காயம் விலை கிலோ ரூ. 60-க்கு மேல் இருந்தது. தற்போது தில்லி மதர் டைரி விற்பனையகங்களில் கிலோ ரூ. 45-ஆக குறைந்துள்ளது' என்றார்.

இருதரப்பு வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், "மகாராஷ்டிரத்தில் இருந்து தில்லிக்கு போதுமான வெங்காயத்தை விநியோகம் செய்ய மத்திய அரசு தீவிர நடவடிக்கை எடுக்கும் என அதன் சார்பில் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் உறுதியளித்துள்ளார்.

வெங்காய விலையைக் குறைக்கவும், வெங்காய வரத்தை உறுதிப்படுத்தவும் மத்திய அரசும், தில்லி அரசும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அப்போதுதான், பொதுமக்கள் பாதிக்கபட மாட்டார்கள், பாதிக்கப்படவும் கூடாது' என்று உத்தரவிட்டனர்.

**தமிழகத்தில் இன்றும் மழை பெய்ய வாய்ப்பு**

இலங்கையில் அருகே உருவாகியுள்ள காற்று மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகம், புதுச்சேரியில் வெள்ளிக்கிழமையும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

அடுத்த இரு நாள்களுக்கு தமிழகத்தின் சில இடங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் அறிவித்தது. தென்மேற்குப் பருவமழை காரணமாக மாநிலத்தின் பல மாவட்டங்களில் மழை பெய்து வந்தது. இந்நிலையில் புதன்கிழமை இலங்கை அருகே காற்று மேலடுக்கில் சுழற்சி உருவானது.

இதன் தாக்கமாக தமிழகம், புதுச்சேரியில் அடுத்த இரு நாள்களுக்கு பரவலாக மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் புதன்கிழமை அறிவித்தது. அதன்படி சிவகங்கை, விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், விருத்தாலசலம், திருவண்ணாமலை, அரியலூர், மதுரை உள்பட மாநிலத்தின் பல இடங்களில் வியாழக்கிழமை பரவலாக மழை பெய்தது.

வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தின் சில இடங்களில் கன மழையும், அநேக இடங்களில் பரவலாக மழையும் பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவில் மழை பெய்யக் கூடும்.

வியாழக்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்):

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம், கடலூர் மாவட்டம் தொழுதூர் - 110, நத்தம், விழுப்புரம் மாவட்டம் மயிலம், திருவாரூர் மாவட்டம் நன்னிலம், நாகப்பட்டினம், விருத்தாச்சலம் - 80, திருவண்ணாமலை, அரியலூர், சேலம் மாவட்டம் ஆத்தூர், திருவாரூர் மாவட்டம் வலங்கைமான், பட்டுக்கோட்டை - 70, திருச்சி மாவட்டம் மருங்காபுரி, திருத்துறைப்பூண்டி, வாழப்பாடி, அரியலூர் மாவட்டம் செந்துறை - 60.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு**

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறந்துவிடப்படும் நீரின் அளவு வியாழக்கிழமை குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக நொடிக்கு 21 ஆயிரம் கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்து வரும் மழையால், பாசனத்துக்கான நீரின் தேவை குறைந்துள்ளது.

இதனால், வியாழக்கிழமை காலை முதல் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு திறந்துவிடப்படும் நீரின் அளவு நொடிக்கு 18 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 113.79 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 7,749 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர் இருப்பு 83.91 டி.எம்.சியாக இருந்தது.

**திவாலாகும் இந்தியப் பொருளாதாரம்! என்ன காரணம்? என்ன தீர்வு?**



எப்படி நடப்புக் கணக்கில் உபரி பற்றாக்குறையானது என்பதையும், இறக்குமதி அதிகரித்து உற்பத்தி குறைந்தது என்பதையும் ஆட்சியில் இருக்கும் பொருளாதார மேதைகள் வேடிக்கை பார்த்தார்கள் என்பதைப் பார்த்தோம். அதற்கு இவர்கள் சொன்ன சமாதானம், சர்வதேச அளவில் காணப்பட்ட பொருளாதார மந்த நிலை.

தொழில் துறை உற்பத்தி குறைந்ததற்கு 2008-ல் ஏற்பட்ட பொருளாதார மந்த நிலையைக் காரணமாகக் கூற முடியாது. ஏனென்றால், 2008-09இல் 6.7 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி 2009-10இல் 8.6 சதவீதமாகவும், 2010-11இல் 9.3 சதவீதமாகவும் உயர்ந்துள்ளது. மேலும், பொருளாதார மந்தநிலை முதலில் முதலீடுகளையும், பின்னரே உற்பத்தியையும் பாதிக்கும். முதலீடு சுருங்கிய பிறகுதான் உற்பத்தி வீழ்ச்சியடையும். ஆனால், இங்கு முதலீடு (மூலதனப் பொருள் இறக்குமதி) மூன்றில் இரண்டு பங்கு அதிகரித்தும், உற்பத்தி பாதிக்கும் கீழே குறைந்துவிட்டது. இது என்ன புதிர்?

பிந்தைய 5 ஆண்டுகளில், மூலதனப் பொருள்களின் அதிகரித்த இறக்குமதிதான் தேசிய உற்பத்தி வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. இறக்குமதி அதிகரித்ததால் உள்ளூர் மூலதனப் பொருள் தொழில் துறை சரிவைச் சந்தித்தது. 2009-10இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.6 சதவீதமாக அதிகரித்தபோதும், அதற்கு ஈடுகொடுக்கும் வகையில் இல்லாமல் தொழில் துறை உற்பத்தி வெறும் 5.3 சதவீதம் அதிகரித்தது.

பின்னர் மூலதனப் பொருள் உற்பத்தி 2011-12இல் 4 சதவீதமும், 2012-13இல் 5.7 சதவீதமும் சரிவைக் கண்டது. மேலும், கடந்த 3 ஆண்டுகளில் இடைநிலைப் பொருள்களின் உற்பத்தியும் அதிகரிக்கவில்லை.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் மூலதனப் பொருள் தொழில் துறையை, மூலதனப் பொருள் இறக்குமதி சுனாமி போல தாக்கிய நிலையில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்கள் இந்தியச் சந்தையில் வெள்ளமெனப் பாய்ந்தது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது (2001-04) வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட பொருள்களின் இறக்குமதி வெறும் 600 மில்லியன் (ஒரு மில்லியன் என்பது 10 லட்சம்) டாலராக இருந்தது. ஆனால், 2004-05 முதல் 2012-13 வரை வெளிநாட்டுப் பொருள்களின் இறக்குமதி 8 மடங்கு அதிகரித்து சராசரியாக ஆண்டுக்கு 5.5 பில்லியன் (ஒரு பில்லியன் என்பது 100 கோடி) டாலராக உயர்ந்தது.

இதே காலகட்டத்தில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தி 3.2 மடங்கு உயர்ந்தது. இது தயாரிக்கப்பட்ட பொருள்களின் இறக்குமதியில் மூன்றில் ஒரு பங்குதான். 9 ஆண்டு கால ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில், தயாரிக்கப்பட்ட பொருள்களின் இறக்குமதி 50 பில்லியன் டாலராக உயர்ந்தது. இது தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் வெறும் 2.3 பில்லியன் டாலராக இருந்தது. மூலதனப் பொருள் இறக்குமதி தேசிய உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பதில் அழிக்கவே செய்தது. தேசிய உற்பத்தி அழிவுக்கு, தயாரிக்கப்பட்ட பொருள்களின் இறக்குமதியும் காரணமாக அமைந்தது.

**உற்பத்தியை அழித்த நடப்புக் கணக்குப் பற்றாக்குறை**

வர்த்தக உபரி என்பது உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் என்பதும், வர்த்தகப் பற்றாக்குறை என்பது அதைக் குறைக்கும் என்பதும் அடிப்படைப் பொருளாதாரம் ஆகும். எனவே, வர்த்தகப் பற்றாக்குறையான நடப்புக் கணக்குப் பற்றாக்குறை விகிதம், அதே அளவுக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியைக் குறைத்தது.

நடப்புக் கணக்குப் பற்றாக்குறையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியை 2007-08இல் 0.8 சதவீதமும், 1.5 சதவீதமும் (2008-09), 2.1 சதவீதமும் (2009-10), 1.4

சதவீதமும் (2010-11), 2.6 சதவீதமும் (2011-12), 3.9 சதவீதமும் (2012-13) குறைத்துள்ளது. ஒரு கணக்குக்காக, நடப்புக் கணக்குப் பற்றாக்குறையை விலக்கிவிட்டால், இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2007-08இல் 10.8 சதவீதமாகவும் (9.3% அல்ல), 2008-09இல் 8.2 சதவீதமாகவும் (6.7% அல்ல), 2010-11இல் 10.7 சதவீதமாகவும் (8.6% அல்ல), 2011-12இல் 8.8 சதவீதமாகவும் (6.2% அல்ல), 2012-13இல் 8.9 சதவீதமாகவும் (5% அல்ல) இருந்திருக்கும்.

கச்சா எண்ணெய், தங்கம் ஆகியவற்றின் இறக்குமதி நமது அன்னியச் செலாவணிக் கையிருப்பை ஓரளவுக்கு விழுங்கிவிட்டது என்பது உண்மைதான். ஆனால், மூலதனப் பொருள்களுக்கும் இவற்றுக்கும் அடிப்படையிலேயே வித்தியாசங்கள் உள்ளன.

சர்வதேச உற்பத்தியில் சுமார் 25 சதவீதத்திலிருந்து 33 சதவீதம் அளவு தங்கத்தை இந்தியர்கள் வாங்குகிறார்கள். இந்தியாவின் தேவையில் நான்கில் ஒரு பங்குதான் பெட்ரோலியப் பொருள்கள் இந்தியாவில் உற்பத்தி செய்யப்படுகின்றன. மீதி நான்கில் மூன்று பங்கை இறக்குமதி செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அதை மறுப்பதற்கில்லை. அது மட்டுமே பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் என்பதை ஏற்பதற்கில்லை.

ஆனால், இப்போது இறக்குமதி செய்யப்படும் இதர வெளிநாட்டுப் பொருள்கள் பெரும்பாலானவை இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன. தேவையில்லாமல் இந்தியாவில் உற்பத்தியாகும் பொருள்களை மிக அதிகமாக வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்ய மன்மோகன் சிங் அரசு அனுமதித்ததால், உள்நாட்டு மூலதனப் பொருள் உற்பத்தி பாதிக்கப்பட்டு, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவையும் குறைத்துவிட்டது.

**கச்சா எண்ணெய், தங்கம் காரணமல்ல!**

ரூபாய் மதிப்பின் வீழ்ச்சிக்கு கச்சா எண்ணெயும், தங்கமும் மட்டுமே காரணமல்ல அல்லது ஓரளவே காரணம். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் 9 ஆண்டு கால ஆட்சியில் 402 பில்லியன் டாலருக்கு தங்கம், வெள்ளி, வைரம், வைடூரியம் போன்ற விலைமதிப்பற்ற கற்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

பார்ப்பதற்கு இது பெரிய தொகை போலத் தோன்றலாம். ஆனால், கடந்த 9 ஆண்டுகளில் 251 பில்லியன் டாலர் மதிப்புக்கு நகைப் பொருள்களும், விலைமதிப்பற்ற கற்களும் ஏற்றுமதியும் செய்யப்பட்டுள்ளன. அதாவது, இறக்குமதி செய்யப்பட்ட தங்கமும், வைரம் போன்ற கற்களும் ஆபரணங்களாக்கப்பட்டு ஏற்றுமதியும் செய்யப்பட்டிருக்கின்றன. இதைக் கழித்துவிட்டால் நிகரப் பற்றாக்குறை 9 ஆண்டுகளில் 151 பில்லியன் டாலர்தான்.

அதேபோல, 9 ஆண்டுகளில் பெட்ரோலிய பொருள்கள் 804 பில்லியன் டாலருக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. ஆனால், பெட்ரோலியப் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட 279 பில்லியன் டாலரை கழித்துவிட்டால் நிகரப் பற்றாக்குறை 525 பில்லியன் டாலர் ஆகும். இது 587 பில்லியன் டாலர் மூலதனப் பொருள் இறக்குமதியைவிடக் குறைவானதே ஆகும்.

கடந்த 5 ஆண்டுகளில் பெட்ரோலியப் பொருள்களின் இறக்குமதியின் நிகர மதிப்பு 360 பில்லியன் டாலர். இதே காலகட்டத்தில் 407 பில்லியன் டாலர் அளவுக்கு மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்திருக்கிறோம். பெட்ரோலியப் பொருள்களின் இறக்குமதி தவிர்க்க முடியாதது, சரி. மூலதனப் பொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்தி இருக்கலாமே, ஏன் செய்யவில்லை?

பின்விளைவுகளைப் பற்றி கொஞ்சமும் கவலையில்லாமல் மூலதனப் பொருள்களை இறக்குமதி செய்ததால் நடப்புக் கணக்குப் பற்றாக்குறை அதிகரித்து ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்தது என்றும், உள்ளூர் உற்பத்தியையும், மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் பாதித்தது என்றும் கூறுவதற்கு ஒரு ஞானி வேண்டுமா என்ன? சாதாரண மனிதனுக்குக்கூட தெரியும் இந்த உண்மை. பொருளாதார மேதைகளுக்குத் தெரியாதா என்ன?

ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி அடைந்ததால் ஏற்படும் ஒரே ஒரு விளைவை மட்டும் பார்ப்போம். எண்ணெய் இறக்குமதிக்காக டாலரை வாங்குவதற்கு கூடுதலாகச் செலவழிக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும், இந்தியா எண்ணெய்க்காக செலவழிக்கும் தொகையை ரூ.9,500 கோடி அதிகரிக்கச் செய்துவிடும். இப்போதைய ரூபாய்

மதிப்பினால், இந்தியா எண்ணெய் இறக்குமதிக்காக ஆண்டுதோறும் கூடுதலாக ரூ.1.60 லட்சம் கோடி செலவழிக்க வேண்டிய நிலை உருவாகி உள்ளது.

பொருளாதாரச் சீரழிவுக்கு நடப்புக் கணக்குப் பற்றாக்குறை என்பது ஒரு காரணம் மட்டுமே. பத்தாண்டுகளாக பொருளாதாரம் தொடர்ந்து சீரழிந்ததற்கான மேலும் சில காரணங்களையும், புள்ளிவிவரங்களையும் அடுத்து பார்ப்போம்.

**ரோஜா சாகுபடியில் உயர் தொழில்நுட்பங்கள்!**



ரோஜா சாகுபடியில் உயர்தொழில்நுட்ப முறைகளைப் பின்பற்றினால் கூடுதல் மகசூலும், அதிக லாபமும் ஈட்டலாம் என்று தோட்டக்கலைத் துறை தெரிவித்துள்ளது.

ரகங்கள்: எட்வர்ட் ரோஜா, ஆந்திர சிவப்பு ரோஜா.

மண்வகை: வடிகால் வசதியுள்ள மணற்சாரி வண்டல்.

இடைவெளி: வரிசைக்கு வரிசை 2 மீட்டர், செடிக்குச் செடி 1 மீட்டர் என்ற இடைவெளி அவசியம். ஒன்றரை அடி கன அளவுள்ள குழிகள் தேவை. நடுவதற்கு முன் குழிக்கு 10 கிலோ தொழு உரம், 20 கிராம் லிண்டேன் தூள் இட வேண்டும்.

நீர்ப்பாசனம்: புதுத் தளிர் விடும்வரை இரு நாள்களுக்கு ஒரு முறையும், பின்னர் வாரம் ஒரு முறையும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

உர அளவு: ஜூலையில் ஒரு முறையும், கவாத்து செய்த பின்னர் அக்டோபரில் ஒரு முறையும் என இரு முறை செடிக்கு 10 கிலோ தொழுஉரம், 15 கிராம் யூரியா, 75 கிராம் சூப்பர் பாஸ்பேட், 20 கிராம் பொட்டாஷ் உரங்களை இட வேண்டும்.

பயிர்ப் பாதுகாப்பு: ரோஜாவில் செதில் பூச்சி, மாவுப் பூச்சி, மொட்டுப் புழு, இலைப்பேன், அசுவிணி தத்துப் பூச்சிகள் தாக்கும் வாய்ப்புள்ளது. இவற்றைக் கட்டுப்படுத்த தகுந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம்.

மாவுப்பூச்சி கட்டுப்பாடு: ஒரு லிட்டர் தண்ணீர்க்கு 2 மி.லி. என்ற அளவில் மானோகுரோட்டோபாஸ் அல்லது மிதைல் பாரத்தியான் கலந்து தெளிக்க வேண்டும்.

மொட்டுப்புழு கட்டுப்பாடு: பூக்கும் தருணத்தில் 15 நாள்களுக்கு ஒருமுறை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. என்ற அளவில் மானோ குரோட்டோபாஸ் மருந்து தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

இலைப்பேன், அசுவிணி, தத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த மூன்று சதவீத வேப்ப எண்ணெய் அல்லது ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி. பாசலோன் கலந்து தெளிக்கலாம். மிதைல் ஓ டெமட்டான் மருந்தும் பயன்படுத்தலாம்.

நோய்கள்: இலைகளில் வட்ட வடிவில் கரும்புள்ளிகள் தோன்றி, இலைகள் உதிர்வதை தடுக்க கார்பண்டசிம் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் என்ற அளவில் கலந்து மாதம் இரு முறை தெளிக்க வேண்டும். சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஒரு கிராம் கார்பண்டசிம் அல்லது 2 கிராம் நனையும் கந்தகம் கலந்து தெளிக்கலாம்.

மகசூல்: முதலாம் ஆண்டே ரோஜா பூக்க ஆரம்பிக்கும். இருப்பினும் பொருளாதார ரீதியாக இரண்டாம் ஆண்டு முதலே நல்ல பலன் கிடைக்கும். கவாத்து செய்த 45ஆவது நாள் முதல் பூக்கத் தொடங்கும். மலர்ந்த மலர்களை அதிகாலையில் பறிக்க வேண்டும். இத்தகைய தொழில்நுட்பங்களைப் பின்பற்றினால் ஓராண்டில் ஒரு ஏக்கர் பரப்பில் 4 லட்சம் மலர்களைப் பறிக்க முடியும். மேலும், விவரங்களுக்கு அந்தந்தப் பகுதியில் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலகங்களை அணுகலாம்.

**விதைப் பரிசோதனை அவசியம்**



நெல் விதைகளைப் பரிசோதனை செய்து கொண்டு சம்பா பட்டத்தில் ஈடுபட்டால் அதிக மகசூல் பெறலாம் என்று காஞ்சிபுரம் மாவட்ட விதை பரிசோதனை அலுவலர் சி.பெருமாள் அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: காஞ்சிபுரம் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. மத்திய கால நெல் ரகங்களான வெள்ளைப் பொன்னி, மே.வெ. பொன்னி, பாபட்லா - 5205, குறுகிய கால ரகங்களான ஏடிடி (ஆர்) 45, ஏடிடி - 36, ஏடிடி - 37, ஏடிடி - 39 ஆகியவை முன்சம்பா மற்றும் சம்பா பருவத்துக்கு பயிரிட மிகவும் ஏற்ற ரகங்களாகும்.

இப்போது தமிழகத்தில் நெல் பயிரிடப்படும் அனைத்து பகுதிகளிலும் உயர் விளைச்சலும் அதிக வருமானமும் தரக்கூடிய, திருந்திய நெல் சாகுபடி முறை விவசாயிகளால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இந்த முறைப்படி சாகுபடி செய்யும் போது ஏக்கருக்கு 3 கிலோ என்ற அளவே விதை நட்டால் போதும். சதுர நடவு முறையில் அதாவது 22.5 செ.மீ.-க்கு 22.5 செ.மீ. என்ற பயிர் இடைவெளியில் நாற்றுகள் நடப்படுவதோடு 1 ச.மீட்டருக்கு, 25 குத்துகள் பயிர் என்ற அளவில் பராமரிக்கப்படுகிறது.

போதிய காற்றோட்ட வசதியும், பூச்சி நோய்தாக்காத வண்ணம் பயிர்கள் ஆரோக்கியமாக வளர்ந்து குத்துக்கு 30-40, வாளிப்பான கதிர்கள் கிடைக்கும். மேலும் ஒவ்வொரு கதிரும் சராசரியாக 200-250 நெல்மணிகளைக் கொண்டதாக இருக்கும்.

ஏக்கருக்கு 3 கிலோ என்ற விதையளவை மேற்கொள்ளும்போது ஒவ்வொரு நெல் மணியும் தரமாகவும், அதிக முளைப்புத்திறன் கொண்டவையாகவும் இருக்க வேண்டும். அதிகபட்ச முளைப்புத்திறன் கொண்ட விதைகளை பயன்படுத்தும்போது நாம் திட்டமிட்ட சாகுபடி பரப்பில் நடவு செய்ய போதுமான நாற்றுகள் கிடைக்கும்.

இந்த சம்பா பட்டத்தில் உத்தரமேரூர், மதுராந்தகம், சித்தாமூர், பவுஞ்சூர், அச்சிறுப்பாக்கம் வட்டார விவசாயிகள் ஏற்கெனவே தங்களது கையிருப்பில் உள்ள நெல்விதைகளையே விதைப்புக்கு பயன்படுத்தி வருகின்றனர்.

அப்படி பயன்படுத்தும் போது கையிருப்பு விதைகள் போதுமான முளைப்புத்திறனுடன் இருக்கிறதா என பார்ப்பது அவசியம்.

எனவே விவசாயிகள் நாற்று நடும் முன் விதைப்புக்காக தங்கள் கைவசம் உள்ள நெல் விதையிலிருந்து 400 கிராம் அளவில் மாதிரி எடுத்து காஞ்சிபுரத்தில் உள்ள விதை பரிசோதனை அலுவலகத்தில் ரூ.30 கட்டணத்துடன் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

மேலும் விதை பரிசோதனை அலுவலர், விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரிக்கு தபால் மூலமும் அனுப்பி பரிசோதனை செய்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**தென்னையில் எரி பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்**



தென்னையில் நத்தைப் புழுக்கள் என்னும் எரி பூச்சிகள் ஓலைகளையும், காய்களையும் சேதப்படுத்தி மிகுந்த பாதிப்பை ஏற்படுத்துகின்றன. இவற்றைக்

கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து கிருஷ்ணகிரி வேளாண்மை இணை இயக்குநர் ராதாகிருஷ்ணன் கூறியது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 16 ஆயிரம் ஹெக்டர் நிலப் பரப்பில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், பர்கூர், மத்தூர், ஊத்தங்கரை ஆகிய வட்டாரங்களில் அதிகளவு தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

பிரதான வருமானம் தரக்கூடிய தென்னை மரங்களில் குறிப்பாக, காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் புதிதாக புழுக்களின் தாக்குதல் கண்டறியப்பட்டது.

தென்னையைத் தாக்கும் இந்த வகையான புதிய புழுக்கள் நத்தைப் புழுக்கள் எனும் எரி பூச்சிகள் என வேளாண் விஞ்ஞானிகளால் கண்டறியப்பட்டது.

காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் அரசம்பட்டி, பெண்டரஅள்ளி, புளியூர், மஞ்சமேடு, பாரூர், கீழ்குப்பம், துரைப்பட்டி, பாப்பனூர், மேட்டுக்கரை, ஆட்டுக்கானூர் ஆகிய கிராமங்களில் உள்ள தென்னை மரங்களில் நத்தைப் புழுக்கள் என்னும் எரி பூச்சிகளின் தாக்குதல் தற்போது பரவலாகத் தென்படுகிறது.

இந்தப் புழுக்கள் பச்சை கலந்த மஞ்சள் நிறம், வெள்ளை கோடுகளுடன் நான்கு வரிசை ரோமங்களுடனும், ரோமங்களின் நுனி சிவப்பு அல்லது கருப்பு நிறத்துடனும் காணப்படும். இது உடலில் பட்டால் அரிக்கும் தன்மை கொண்டது. இந்த நத்தைப் புழுக்கள் தென்னை ஓலைகளைச் சுரண்டியும், கடித்தும் சாப்பிட்டு மிகப் பெரிய சேதத்தை உருவாக்கிவிடும். இதன் மூலம் ஓலைகள் காய்ந்தது போல் காணப்படும். இதனால், பச்சை முழுவதும் சுரண்டப்பட்டு, மரத்தின் வளர்ச்சி குன்றி விளைச்சல் முழுவதும் பாதிக்கப்படும் அபாயம் ஏற்படும்.

கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: தென்னை மரங்களில் இந்தப் புழுக்கள் தென்பட்டால் உடனடியாக விளக்குப் பொறிகளை வைத்து அந்து பூச்சிகளை அப்புறப்படுத்த வேண்டும்.

தாய் அந்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த இரவு நேரங்களில் (குறிப்பாக 7 மணி முதல் 11 மணி வரை) தென்னந் தோப்புகளில் ஏக்கருக்கு 3 முதல் 5 பொறிகள்

வைத்து அந்துப் பூச்சிகளைக் கவர்ந்து அழிக்கலாம். இதனால், இனவிருத்தி முழுவதும் குறைந்துவிடும். காய்ந்த ஓலைகள், மட்டைகளை அப்புறப்படுத்த வேண்டும். நிலங்களை உழவு செய்து சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

வேதியியல் முறையில், ஒரு லிட்டர் தண்ணீரில் டைகுளோர்வாஸ் 76 சதம் இசி. 2 மில்லி அல்லது மோனோகுரோட்டோபாஸ் 36 சதம் எஸ்எல் 2 மில்லி கலந்து, இத்துடன் பூஞ்சானக் கொல்லி மருந்து, காப்பர் ஆக்சி குளோரைடு 2.5 கிராம் கரைத்து ஒட்டும் திரவத்துடன் தெளிப்பான் கொண்டு தெளித்து கட்டுப்படுத்தலாம். இந்த மருந்துகள் அருகில் உள்ள அனைத்து தனியார் உரம் மற்றும் பூச்சி மருந்துக் கடைகளில் விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த வகையான வழிமுறைகளைக் கடைப்பிடித்து தென்னையை நத்தைப் பூச்சுகளின் தாக்குதலில் இருந்து காத்து நல்ல மகசூல் பெறலாம்.

மேலும், விவரங்களுக்கு மாவட்டத்திலுள்ள வட்டார வேளாண் உதவி இயக்குநர்கள் மற்றும் களப் பணியாளர்களை அணுகலாம் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.08.2013**

## நெல் உற்பத்தி அதிகரிப்பதற்கு வேளாண் அதிகாரி யோசனை

திருத்துறைப்பூண்டிதிருத்துறைப்பூண்டியில் :, நேரடி நெல்விதைப்பு செய்யப்பட்டு, பயிர்கள் நன்கு வளர்ந்துள்ள நிலையில், தொழில்நுட்ப முறைப்படி விவசாயத்தை மேற்கொண்டு நல்ல மகசூல் பெற விவசாயிகள் முன்வர வேண்டும் என, உதவி வேளாண்மை இயக்குனர் நடேசன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து, மேலும் அவர் கூறியுள்ளதாவதுதிருவாரூர் மாவட்டம் :, திருத்துறைப்பூண்டி வட்டாரத்தில் இதுவரை 35 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நேரடி நெல்விதைப்பு செய்யப்பட்டுள்ளதுஇப்பயிர .ுகள் நன்றாக முளைத்துள்ளனஅதிக . மகசூல் பெற25 தினங்களுக்கு பின்னர் சீராக தண்ணீர் வைத்து, நீர் கட்டுவதால் பயர்களின் வேர்வளர்ச்சி தூண்டப்படும்அதனால் ., நிலத்திலிருந்து சத்துக்களை உறிஞ்சும் திறன் அதிகரித்து, தூர் கட்டி நோய் எதிர்ப்பு தன்மை பெறும்தண்ணீர் . கட்டியவுடன் களை எடுக்கவும் சில இடங்களில் கூடுதல் பயிர்கள் இருந்தால் பயிர் குறைவாக உள்ள இடங்களில் நட வேண்டும்.

களைகளை எடுப்பதால் மண் இளகி காற்றோட்டம் அதிகரிப்பதால் வேர்வளர்ச்சி அதிகரித்து, தூர் கட்டும். ஏக்கருக்கு ஆறு பொட்டலம் அசோஸ்பயிரில்லம் மற்றும் ஆறு பொட்டலம் பாஸ்டோ பாக்டீரியம் ஆகிய நுண்ணுயிர்களை 50 கிலோ மக்கிய எருவுடன் கலந்து தெளித்தபின் களைகளை எடுக்க வேண்டும்இதனால் ., நுண்ணுயிர்கள் மண்ணில் நன்கு கலந்து விடும் விதை முளைத்து .30 தினங்களுக்கு பின் ஒரு ஏக்கருக்கு 50 கிலோ டி.பி.ஏ., 18 கிலோ பொட்டாஷ், 10 கிலோ சிங்சல்பேட் மற்றும் 5 கிலோ நுண்ணூட்டம் கலந்து, சீராக நீர்கட்டி உரமிட வேண்டும்.

பயிர்களுக்கு முதல் உரம் இட்ட 15 தினங்களுக்கு பின் 22 கிலோ யூரியாவுடன் 5 கிலோ வேப்பம்புண்ணாக்கு கலந்து பின்னர் 22 கிலோ ஜிப்சம் கலந்து தெளிக்க வேண்டும் வேப்பம்புண்ணாக்கு கலந்து .இடுவதால் தழைச்சத்து வீணாவது தடுக்கப்பட்டு, சீராக சத்து பயிருக்கு கிடைக்கும்மேலும் பயிர்களை பூச்சி . நோய் தாக்காதுமேலும் .நெல் மகசூல் அதிகரிக்கும் ., இயற்கை உரங்களை தெளித்து, அதிக மகசூல் பெறலாம்இவ்வாறு ., அவர் கூறினார்.

## மாவுப் பூச்சி தாக்குதல்குட்டை" திராட்சைக்கு :'

கம்பம் : மாவுப்பூச்சி தாக்குதல் அதிகரித்துள்ளதால், திராட்சை சாகுபடிக்கு, "குட்பை' சொல்ல விவசாயிகள் தயாராகி வருகின்றனர். மாற்றுப் பயிராக வாழை சாகுபடி செய்ய முடிவு செய்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில், திராட்சை சாகுபடி அதிக பரப்பில் மேற்கொள்ளப்படுகிறது. ஆண்டிற்கு மூன்று அறுவடை செய்யப்படுகிறது. ஏற்றுமதி ரகம் மற்றும் ஒயின் ரகங்களை சோதனை அடிப்படையில் சாகுபடி செய்துள்ளனர்.திராட்சை விவசாயிகளுக்கு செவட்டை, சாம்பல் நோய்கள் பெரிய அளவில் பிரச்னையை கொடுத்து வந்தன. தற்போது திராட்சையில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிக சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன.திராட்சை விவசாயிகள் கூறியதாவது:

" மாவுப்பூச்சிகளால் ஒரு இலையில் இருந்து மற்றொரு இலைக்கு போக முடியாது. வெள்ளை நிற பிசின் போன்ற திரவத்தை சுரக்கின்றன. அந்த திரவத்தை உறிஞ்ச வரும் எறும்புகளின் முதுகில் அமர்ந்து கொண்டு, அடுத்த இலைக்கு சென்று விடுகிறது. இலைகளின் பச்சையம் முழுவதும் மாறி விடுகிறது. மாவுப்பூச்சியை கட்டுப்படுத்த பூச்சி மருந்துகள் கிடையாது. மாவுப்பூச்சிகளை கட்டுப்படுத்த முடியவில்லை' என்றனர்.

இதனால் காமயகவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, குள்ளப்பகவுண்டன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி உள்ளிட்ட கிராமங்களில், திராட்சை விவசாயிகள், திராட்சை சாகுபடிக்கு "குட்பை' சொல்ல தயாராகிவிட்டனர். மாற்றுப்பயிராக வாழை சாகுபடி செய்ய தோட்டக்கலைத்துறையின் ஆலோசனையை கேட்டு வருகின்றனர்.

தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் கூறியதாவது: மாவுப்பூச்சிகள் முதன்முதலில் பப்பாளி மரங்களில் தான் வந்தன. இப்போது மா, கொய்யா, திராட்சை, ஏன் விஷச்

செடியான பார்த்தீனிய செடிகளை கூட தாக்குகின்றன. சரியான மருந்துகள் கண்டுபிடிக்கவில்லை. ஆரம்பநிலை என்றால் கட்டுப்படுத்தலாம். முற்றியபிறகு ஒன்றும் செய்ய முடியாது,' என்கின்றனர்.

## கறிக் கோழி பண்ணை சிறப்பு திட்டம் பயனாளிகளுக்கு 50 சதவீதம் மானியம் ஏழை மக்களுக்கு அழைப்பு

திருநெல்வேலி கறிக் கோழி பண்ணை சிறப்பு திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு:50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.
கால்நடை பராமரிப்பு துறை மூலம் கிராம பெண்களுக்காக விலையில்லா கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதுவறட்சி . காலத்தில் தீவன புல் பயிரிடுவதற்கு 50 சதவீதம், சிறப்பு தீவன புல் வளர்ப்பு திட்டத்திற்கு 50 சதவீதம், இறைச்சி கோழி பண்ணை சிறப்பு திட்டத்திற்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

நெல்லை மாவட்டத்தில் கோழி பண்ணை வளர்ச்சி திட்டத்தின்படி கொட்டகை அமைக்க 25 சதவீதம் அரசின் மானியமாகவும், நபார்டு பாங்கின் துணிகர முதலீடு திட்டத்தின் கீழ் 25 சதவீதம் மானியமாகவும் வழங்கப்படுகிறதுஇறைச்சி கோழி . பண்ணை அமைக்க ஒரு நபருக்கு8.25 லட்சம் பாங்க் கடன் அளிக்கப்படுகிறது . இதில் பயனாளிகள் பங்கு தொகை 82 ஆயிரத்து 500 ரூபாயாகும்தமிழக அரசு . மற்றும் நபார்டு பாங்க் மானிய தொகையாக தலா2 லட்சத்து 6 ஆயிரத்து 250 ரூபாய் வழங்கப்படுகிறது மீதமுள்ள .3.30 லட்சம் மட்டும்தான் பயனாளிகள் திரும்ப செலுத்த வேண்டும் இதனால் பயனாளிகளுக்கு .4 லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபாய் மானியம் கிடைக்கிறது என்று பிஓ.ஆர். மாரியப்பன் தெரிவித்தார்.

நெல்லை மாவட்டத்தில் கலெக்டர் சமயமூர்த்தியின் உத்தரவின் பேரில் 75 பயனாளிகளுக்கு இறைச்சி கோழி பண்ணை அமைக்க 50 சதவீதம் மானியம் வழங்கப்பட்டுள்ளதுஇத்திட்டத்தின் கீழ் . மூவிருந்தாளி ரோஸ் பாண்டியன்,

இட்டமொழி பண்டாரபுரம் உமையலட்சுமி கூறும் போது, ""தமிழக முதல்வரின் சீரிய திட்டத்தின் மூலம் வாழ்க்கையில் பொருளாதார மேம்பாடு ஏற்பட்டுள்ளது . சுய தொழிலை ஊக்குவிக்கவும், தொழில் முனைவோர் பயன் பெறும் வகையில் அதிக மானியமும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது. இதற்காக தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கிறோம்" என்றனர்.

## கால்நடைகளுக்கு பரிசோதனை முகாம் மாவட்ட கலெக்டர் ராஜேஷ் தகவல்

கிருஷ்ணகிரிகிருஷ்ணகிரி மாவட்டத்தில் :, தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள கறவை பசுக்கள் மற்றும் ஆடுகளுக்கு, இன்று மற்றும் நாளை இனப்பெருக்க மருத்துவ பரிசோதனை மற்றும் குடற்புழு நீக்க முகாம் நடக்கிறது.

கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் உள்ள பெண்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற, விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒரு பயனாளிக்கு நான்கு வெள்ளாடுகள்,செம்மறி ஆடுகள் வீதம், 31 மாவட்டங்களில், மூன் லட்சத்து, 10 ஆயிரத்து, 868 பயனாளிகளுக்கு, 12 லட்சத்து, 43 ஆயிரத்து, 472 வெள்ளாடுகள், செம்மறிஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தில் மீண்டும் ஒரு வெண்மை புரட்சியை உருவாக்கும் வகையில், 21 மாவட்டங்களில், 28 ஆயிரத்து, 246 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும் வழங்கப்பட்டுள்ளனகிருஷ்ணகிரி . மாவட்டத்தை பொறுத்தவரை, 2011-12ம் ஆண்டில், 350 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும், 3,557 பயனாளிகளுக்கு, 14, 228 வெள்ளாடு, செம்மறி ஆடுகளும், 2012-13ம் ஆண்டில், 350 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும், 5,601 பயனாளிகளுக்கு, 22,404 வெள்ளாடு, செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில், ஜூலை வரை, 350 பயனாளிகளுக்கு கறவை பசுக்களும், 1,811 பேருக்கு, 7,244 வெள்ளாடு, செம்மறி ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பயன்பெறும் பயனாளிகள், தங்கள் கால்நடைகளை

கொள்முதல் செய்த பின் நன்கு பராமரிக்க வேண்டும்சிறந்த பயனாளிகளை . ஊக்கப்படுத்தும் பொருட்டு, தமிழ் புத்தாண்டு அன்று பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது.

விலையில்லா கறவை பசுக்கள் மற்றும் வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டங்கள் மூலம் வழங்கப்பட்ட கறவை பசுக்களின் பால் உற்பத்தி திறனை பெருக்கவும், வெள்ளாடுகள், செம்மறி ஆடுகளின் எடையை அதிகரிக்கவும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இன்று மற்றும் நாளை, இருநாட்களில் கறவை பசுக்களுக்கு இனப்பெருக்க மருத்துவ பரிசோதனையும், வெள்ளாடு, செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடக்கிறதுபயனாளிகள் தங்கள் . கால்நடைகளை முகாமுக்கு அழைத்துச் சென்று பயன் பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பர்கூர் இனத்து மாடுகளை காக்க முதல்வர் மூலம் முயற்சிஅமைச்சர்:

ஈரோடுபர்கூர் இன மாடுகளை காக்க :, தமிழக முதல்வரிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக, கால்நடைத்துறை அமைச்சர் சின்னையா தெரிவித்தார்.

கால்நடை பராமரிப்பு துறை சார்பில், வறட்சி நிவாரணமாக, விவசாயிகளுக்கு மானிய விலையில் தீவன சோளம் வழங்கப்பட்டு வருகிறதுதீவனச்சோளம் பெற்ற . விவசாயிகள், முறையாக பயனடைந்துள்ளார்களா என்பதை ஆய்வு செய்ய, கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் சின்னையா, இயக்குனர் பழனிசாமி, துணை செயலாளர் சிவசாமி அடங்கிய குழுவினர், ஈரோடு மாவட்டத்துக்கு நேற்று வந்தனர்.

இக்குழுவினர், பர்கூர் பகுதியில் உள்ள விவசாய நிலங்களை பார்வையிட்டனர். பர்கூர் மலைவாழ் மக்களை சந்தித்து அவர் குறைகளை கேட்டறிந்தார்பர்கூர் . மலைப்பகுதியில் மட்டும் வாழும், "பர்கூர் இன மாடுகளை' காக்க வேண்டும் எனவும், வனப்பகுதிக்குள் இந்த மாடுகளை மேய்க்க செல்லும் மக்களை, வனத்துறையினர் மேய்ச்சலுக்கு அனுமதிப்பதில்லை என தெரிவித்தனர். இதுபற்றி, முதல்வரிடம் எடுத்துக்கூறி, மேய்ச்சலுக்காக செல்லும் மக்களுக்கு, வனத்துறை மூலம் அடையாள அட்டை வழங்கி, அவர்கள் உள்ளே சென்று வர

வழி செய்யப்படும். தவிர, பர்கூர் இன மாடுகள் அழியாமல் காக்க, முதல்வர் மூலம் தேவையான முயற்சிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும், என அமைச்சர் உறுதியளித்தார்.

அப்போது, கலெக்டர் சண்முகம், ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் ராமலிங்கம், உதவி இயக்குனர் முருகன், உதவி மருத்துவர் பிரேம்குமார் ஆகியோர் சென்றிருந்தனர்.

இதைத்தொடர்ந்து, ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில், ஈரோ டு, சேலம், திருப்பூர், கோவை, ஊட்டி ஆகிய ஐந்து மாவட்டங்களை சேர்ந்த கால்நடைத்துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆய்வுக்கூட்டம் நடந்தது.

## கால்நடை தீவனம் தட்டுப்பாடு அற்புத உணவாகும் அசோலா'''

கரூர்கால்நடை தீவனம் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் :, அற்புத உணவான, "அசோலா' தீவனம் கைகொடுத்து வருகிறது.

கடந்த, 10 ஆண்டாக அதிக விளைச்சலை கொடுக்கும் புதிய தீவனப்புல் ரகங்கள் வருகையால், வைக்கோல் மற்றும் தானியம் உற்பத்தி வெகுவாக குறைந்து விட்டதுவிவசாயிகள் . விளைச்சலை மட்டும் கருத்தில் கொண் டு பயிரிடுவதால், கல்நடை தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் கால்நடைகளுக்கு தேவையான சத்துகள் நிறைந்த, "அசோலா' என்ற வளர்ப்பின் மூலம் தீவன பற்றாக்குறையை சமாளிக்க முடியும்.

ஆடு, மாடு, கோழி, முயல், மீன், பன்றி போன்ற கால்நடைகளுக்கு செலவில்லாத அற்புத தீவனமாகவும் அசோலா''' என்னும் நீலப்பச்சைப்பாசி நீரில் வளரும் பாசி வகையாகும்.

"அசோலா' வளர்ப்பை ஊக்குவிக்கும் வகையில், மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள், புதிய நடைமுறையை கண்டறிந்தனர்பாய் போல் . மடித்துக் கொள்ளும், தண்ணீர் கசியாத எச்(அசோலா டிரே) சீட் .டி.பி.டி. உருவாக்கப்பட்டது .இதன் மூலம் அதிக மகசூல் கிடைத்துள்ளது.

இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

இந்த டிரே மூலம் அசோலா"' சாகுபடி செய்வது விவசாயிகளுக்கும், கால்நடை வளர்ப்போருக்கும் எளிதானதுஅடிக்கடி தண்ணீரை மாற்றியும் ., சாணத்தை கரைத்து ஊற்றியும், அசோலா சாகுபடி செய்யலாம்.

மூன்று நாட்களுக்கு ஒருமுறை எடுத்து கால்நடைகளுக்கு தீவனமாக பயன்படுத்தலாம்கரூர் மாவட்டத்தில் ., 350 விவசாயிகளுக்கு டிரே"'க்கள் வழங்கப்பட்டுள்ளது.

இதில், "டிரே', விதை ஆகியவை முழு அளவில் மானியத்தில் அளிக்கப்பட்டுள்ளது . பயிற்சிக்கு இந்த வரும் விவசாயிகளுக்கு, 65 ரூபாய் வழங்கப்பட்டதுஇந்த . தீவனம் மூன்றாண்டு வரை பலன் தரக்கூடியதுஇதில் ., 30 சதவீதம் புரதம், 13 சதவீதம் நார்சத்து, 45 சதவீதம் மாவு சத்து நிறைந்துள்ளது.

ஒரு மாட்டிக்கு, ஒரு நாளைக்கு, இரண்டு கிலோ வரை கொடுக்கலாம்இதன் . ணமாககார, இரண்டு லிட்டர் பால் கூடுதலாக கிடைக்கும்புண்ணாக்கு ., தவிடு, பருத்திக் கொட்டை போன்ற தீவனங்களின் அளவை பாதியாக குறைத்துக் கொடுக்கலாம்.

மாடுகளின் சினைபிடிப்பு தன்மை மேம்படும்இதேபோல ., ஆடு, கோழி, மீன், முயல், பன்றி என அனைத்து கால்நடைகளுக்கும் செலவில்லாத தீவனமாக பயன்படுத்தி அதிக வருமானமும் பெறலாம்.

### குறுவந்திடியில் செவ்பகிய கால சாகு

ஆர்பேட்டை.கே. : நடவு செய்த 20 நாட்வதால்குவடை துவங்களில் அறு, விவ-சாயிகள், செவ்.றனர்கின்டுடியில் அதிக ஆர்வம் காட்பவந்தி பயிர் சாகு மல்லிகை, முல்லை, ரோஜா, கோழிக்ககொண்டை மலர்ளுக்கு அடுத்யாக டிபத வந்திசெவ் பூக்வந்தி பூக்கள் நடவுசெவ் .றனர்கின்படி செய்யிகள் சாகுசாகளை விவ செய்த, 20 நாட்மாக மூன்றுசஅதிக பட் .கலாம்களை பறிக்களில் மலர் மாதங்-களின்அதன் பிறகு பூக் .ளுக்கு பூக்கள் கிடைக்கும் எண்கையும்ணிக், அளவும் குறைய துவங்கும்களைவாரம் ஒரு முறை பூக் . பறித்து, சந்-கின்புதைக்கு அனுப் தியில்வந்செவ்.றனர், இதழ்கள் குறைகவும்வா, மககவும் மாகரந்த தாள்கள் அதி

ளுக்குகபடும் பூக்காணப் விலை கிடைக்-கின்டுபஇவை ஆண் பூக்கள் எனப் .காது மானகளை தரசெடி .றன இடங்களில் இருந்து வாங்வதன் மூலம்கு, இவற்றை தவிர்க்க முடியும்யிகள்சாதியில் உள்ள விவபேட்டை பகு.கே.ஆர்., தற் போது165 ஏக்கர் அளவில், செவ்களைபூக் .ளனர்துள்படி செய்வந்தி சாகு, வேலுார், திருத்தணி கிலோ .றனர்கின்தைக்கு அனுப்பி வைக்சரி சந்ளிட்ட தினஉள், 35 ரூபாய்க்கு விற்-டத்தில்ஒரு ஏக்கர் தோட் .றதுகியானைப, வாரம் 400 கிலோ வரை மகசூல் கிடைக்-.றதுகி

## தீவயோகம்திரம் மானிய விலையில் வினினப்புல் நறுக்கும் நவீன இயந்

காஞ்புரம்சி : கால்களைகான தீவனப் புற்ளுக்கடைந, சிறு சிறு துண்டுகளாக்கும் நவீன இயந்திரம், கால்நடை துறை சார்பில், மானிய விலையில் வழங்.றதுகிடுபகப் தமிகத்தில்ழ, விளை நிலங்மாக குறைந்துணிக்கை வேககளின் எண் வருதுடன்வ, இந்த நிலங்கள் தொழிற்ளாககபுருப்யிசாலை மற்றும் குடி மாறி .றதுகிருவ இதனால், கால்லுக்கு செல்ல முடிசடைகள் மேய்ச்நயாத நிலை ஏற் .ளதுடுள்பட் களை வளர்ப்போர்டைநகால், தங்ளது ஆடுக, மாடுகளை, கொட்ளுக்குகஇவை .றனர்கின்லேயே கட்டி வைத்து வளர்த்து வருளிககைட, தீவனப் புல், வைக்கோல் ஆகிவாக அளித்துவற்றை உணய வரு.றனர்கின் நிலத்தில் இருந்து அறுபடும் இயப்வடை செய்ந்த தீவனப் புல்களை, சிறு, சிறு துண்வுமகளாக நறுக்கடு, கால்காமல்டைகள் இதை வீணாக்ந இருக்-கவும், புல் நறுக்கும் நவீன இயந்நடை துறைரத்தை கால்தி அறி-யுள்திடுத்பகப்மு இதில் .ளது, வேலிமசால், அகத்கீரைதிக், கோ 4, கோ 3 ஆகிய தீவனப் புற்களை தாகபொடி◌கி, கால்.கலாம்ளுக்கு வழங்கடைந இந்த இயந்ரத்தின் விலைதி, 19 ஆயிரம் ரூபாய்நடை துறை மூலம்கால் ., விவளுக்குகயிசா, 75 சதவீதம் மானிய .றதுகிடுபகப்விலையில் வழங் இதுறித்துகு, காஞ் மேட்டைச் சேர்ந்தயர்புரம் பாலிசி சாயி பாலாஜிவிவ கூறி:வதுதாய
கால்களை சிறு சிறுனங்பிடும் தீவடைகள் சாப்ந துண்டுகளாக்கி வழங்கும் வகையில், இயந்இந்த .டதுவிட்துதிரம் வந் இயந்திரம் மூலம், அனைத்து வகை-

ளையும் சிறு சிறுகயான தீவனப் புற் துண்டுகளாக்கலாம் இவை-கடைநகளை கால் கினால்ளுக்கு வழங், குறித்த நேரத்தில் ஜீரணம் ஆகும்களின் பற்கள் டைநகால் . இந்த .விரைவில் தேயாது தீவகாமல்களை வீணாக்னங், கால் .பிடும்டைகள் சாப்ந ரித்துமநான் பரா வரும், 40க்கும் மேற்-னப்யான தீவளுக்கு தேவைகடைநபட்ட கால் புல்லை, இந்த நவீன இயந்மூலம் ரத்தின்தி, சிறு சிறு துண்டுகளாக்கி வழங்கி வரு-கலாம்ரத்தை கையாலும் இயக்திஇந்த இயந் .கிறேன், மின்சாரம் மூலகவும் மா வாறுஇவ் .கலாம்இயக், அவர் கூறினார்.

## வேளாண் சேமிப்பு மையம் விரைவில் வருகளை இருப்பு வைக்க யங்தானி : றதுகி வசதி

திருகளின்யிசாவிவ : வள்ளூர் வசகாகதிக், 39 உலர் களங்களையும், 13 சேமிப்பு கிடங்ளையும்கசு மாவட்களில் வேளாண் வணிக துறை வேறு இடங்டத்தில் பல் .றதுகிஅமைத்து வரு இவை, அடுத்த ஆண்டு மார்ச் மாதத்டிற்கு பாட்திற்குள் பயன் வரும் என, எதிர்.றதுகிபார்க்கப் படு

திருடத்தில்வள்ளூர் மாவட், 84 ஆயிரம் ஹெக்டேரில் நெல்லும், 30 ஆயிரம் ஹெக்-டேரில் பயறு மற்றும் எண்ணெய் வித்-ரிட இலக்கு நிர்பாண்டில் பயிகளும் நடப்துக் பட்டுகப்யிக்ண உள்களை ருட்பொளுக்கு விளைகயிசாலான விவபாபெரும் .ளது இருப்பு வைக்க வசதி இல்ததால்லா, அறுபவையாக விற்டினபின் உட டைக்குவ செய்கின்இதனால் .றனர், போது.மான லாபம் கிடைப்பதில்லை

தற்போது, விவரிக்கும் வகையில்கனத்தை அதிமாகளின் வருயிசா, தமிழ்நாடு நீர்-வள,நிலதிகள்வேறு வசடத்தின் மூலம் பல்வள திட் உருஇது .படுகிறனகப்வாக் குறித்து, வேளாண் வணிக துறையின், இணை இயக்குனர், லேபாகிஸ◌ு-வர் கூறு கையில், ‘‘நடப்பாண்டில், ஒரு வேளாண் விற்பனை மையம், 13 சேகரிப்பு மையம், 39 உலர்யவை அமைக்ககளம் ஆகி, 2.20 கோடி ரூபாயில் பணிகள் நடைபெற்று .றனவருகின்

இவற்றில், நெல் மற்றும் பயறு வகைகளை உலர வைத்து, இருப்பு வைத்து கொள்-ஒரு மூட்டை .ளலாம் நெல்லுக்கு, நாள் ஒன்றுக்கு, 10 பைசாவும்; உலர்த்தற்குவது,

நாள் ஒன்றுக்கு, 20 ரூபாயும் வசூபடும்லிக்கப்,'' என்றார்.

மேலும், ''இவற்றை பராரிக்கும் பொறுப்பும, விவவிடம்யிகள் குழுசா ஒப்-கப்டைக்ப வினர்ழுகுஇக் .படும், விவலிக்கும்ளிடம் வசூகயிசா கட்டணத்தைக் கொண்டு, பரா-வர்கொள்ரிப்பு பணிகளை மேற்ம,'' என்றார்.

### கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்

தர்மபுரிநல்லம்பள்ளி ஒன்றியத்துக்கு உட்பட்ட :, தளவாய்அள்ளி பஞ்சாயத்தில், விலையில்லா கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது.
நல்லம்பள்ளி ஒன்றியம், தளவாய்அள்ளி பஞ்சாயத்தில், 97 பயனாளிகளுக்கு நான்கு ஆடுகள் வீதம், 388 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளதுஇதையொட்டி ., விலையில்லா கால்நடைகளுக்கான சிறப்பு மருத்துவ முகாம் நடந்தது .
விலையில்லா ஆடுகளை பெற்ற பயனாளிகள் முகாமில் ஆடுகளை அழைத்து வந்து பரிசோதனை செய்து கொண்டனர். முகாமில், ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டதுமண்டல உதிவ இயக்குனர் .
மற்றும் இண்டூர் கால்நடை மருத்துவ அலுவலர் சுமதி தலைமையில் கால்நடை மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். ஏற்பாடுகளை, தளவாய்அள்ளி பஞ்சாயத்து தலைவர் தேவராஜ் செய்திருந்தார்.

### தர்மபுரியில் பலத்த மழை

தர்மபுரி: தர்மபுரியில் பலத்த மழை பெய்ததுஇதனால் ., விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.
தர்மபுரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பொய்த்து போன நிலையில், மாவட்டம் முழுவதும் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டது. நீர் ஆதாரங்கள் வறண்டு, உணவு, தானியம், காய்கறிகள் உற்பத்தி பாதிக்கப்பட்டதுநேற்று . காலையில் இருந்து இருண்ட வானிலை இருந்த போதும், மாலை வரையில் மழை ஏமாற்றியதுஇரவு ., 8.10 மணிக்கு மேல் தர்மபுரியில் பலத்த மழை பெய்தது, தொடர்ந்து ஒரு மணி நேரத்துக்கு மேல் மழை பெய்ததால், நகரின் தாழ்வான பகுதியில் மழை நீர் வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடியது.

### "உலகளவு வர்த்தகத்தில் இந்திய மருத்துவ தாவரங்கள் குறைவு

பொள்ளாச்சி இந்தியாவில் ஏறத்தாழ ஏழாயிரம் மருத்துவதாவரங்கள் இருந்த": போதும், வெறும் 10 தாவரங்கள் மட்டுமே உலகளவு வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுவதாக'கல்லூரியில் நடந்த விழா ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

பொள்ளாச்சி என்.எம்.ஜி., கல்லூரி தாவரவியல் துறை சார்பில் சிறப்பு கூட்டம் நடந்ததுகோவை .தாவரவியல் துறை தலைவர் கண்ணன் வரவேற்றார் . கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி தாவரவியல்துறை இணை பேராசிரியர் பாலுசாமி பேசுகையில்,"மருத்துவ தாவரங்களின் மதிப்பு மற்றும் பாதுகாப்பு குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டும்தர்ப்பைப் புல் புறஊதாக் . கதிர்களை கிரகித்துக்கொள்ளும் சக்தி மிக்கதுஇதனால் தான் கிரகணங்கள் . அன்று வீடுகளில் தண்ணீர் கலங்களில் தர்ப்பைப் புல்லைப் போட்டு வைக்கும் வழக்கம் உள்ளது.

ஏறத்தாழ 7,000 மருத்துவ தாவரங்கள் இந்தியாவில் இருந்த போதும் 350 தாவரங்கள் மட்டுமே பெருமளவில் பயன்பாட்டில் உள்ளனஅவற்றில் குறிப்பாக . 10 தாவரங்கள் மட்டுமே உலகளவில் வர்த்தகத்தில் ஈடுபடுத்தப்படுகிறது. வளர்ந்து வரும் சீனாவில் மருத்துவ தாவரங்கள் பயன்படுத்தப்படும் அளவுக்கு இந்தியாவில் பயன்படுத்தப்படுவதில்லையூக்கலிப்டஸ் ., சீமை கருவேலம், ஆகாயத்தாமரை போன்ற அந்நிய தாவரங்களை அறிமுகப்படுத்தியதன் மூலம் நமது மருத்துவ தாவரங்கள் பேரழிவின் பட்டியலில் உள்ளதுள்மருத்துவ தாவரங்க . குறித்து அறிவதும், அதன் பயன்பாட்டை அதிகரிப்பதும் நம் தேசத்துக்கு அவசியம்' என்றார்உயிரியல் பயிலும் மாணவர்கள் மருத்துவ தாவரங்களை. பராமரிக்க வேண்டும் என மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதுஇறுதியாண்டு . மாணவி புஷ்பலதா நன்றி கூறினார்.

### அரசு கொள்முதல் அறிவிப்பால்பருப்பு விலை மேலும் உயரும்

சேலம்தமிழகத்தில்:, நியாயவிலை கடைகளுக்கு வினியோகம் செய்வதற்காக, நுகர்பொருள் வாணிபக் கழகம், 60 ஆயிரம் டன் பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய "டெண்டர்' வெளியிட்டு உள்ளது.

இந்த அறிவிப்பால், வெளிச்சந்தையில் பருப்பு விலை கடுமையாக உயரும் என,

வியாபாரிகள் குற்றம் சாட்டுகின்றனர்தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ., 10 ஆயிரம் டன் துவரம் பருப்பு, 25 ஆயிரம் டன் உளுந்தம் பருப்பு,25 ஆயி ரம் டன் கனடா எல்லோ லெண்டிஸ் பருப்பு''' என, மொத்தம், 60 ஆயிரம் டன் பருப்பை கொள்முதல் செய்வதற்கான டெண்டரை வெளியிட்டு உள்ளது.

இந்தடெண்டர்'''செப்.,12ம் தேதி திறக்கப்படுகிறதுடெண்டர்".' எடுத்த நாளில் இருந்து,துவரம் பருப்பு, கனடியன் பருப்பை, 30 வேலை நாட்களிலும், உளுந்தம் பருப்பை, 45 வேலை நாட்களிலும், வினியோகம் செய்ய வேண்டும்அரசு பொது . வினியோக திட்டத்துக்காக, இவற்றை கொள்முதல் செய்வதால், தமிழகத்தில் துவரம் பருப்பு, உளுந்தம் பருப்புக்கு தட்டுப்பாடு ஏற்படுவதோடு, விலை உயரவும் வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்தமிழகத்தில்., கடந்த ஆண்டு நிலவிய வறட்சியால், ஆலை அதிபர்கள், வியாபாரிகள் வெளி மாநிலங்களில் இருந்து துவரை, உளுந்தம் பருப்பு வகைகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.08.2013**

**விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் வழங்க வேண்டும்**

சிவகங்கைமாவட்டத்தில் பயிர் இன்சூரன்ஸ் செய்த விவசாயிகளுக்கு : உடனடியாக இன்சூன்ஸ் தொகை வழங்க வேண்டும் என உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளதுசிவகங்கையில் உழைக்கும் மக்கள் . விடுதலை இயக்க மாவட்ட கூட்டம் அமைப்பாளர் சிவக்குமார் தலைமையில் நடந்ததுமாவட்டத் தலைவர் . அற்புதம், இளைஞரணி அமைப்பாளர் செயராசு, ஒன்றிய நிர்வாகிகள் சாமிநாதன், சேசு, லூயிசு, முனியசாமி, செல்வராசு மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இதில் தந்தை, மகன் நிலத்தகராறு தொடர்பாக காளையார்கோவில் போலீஸ் ஸ்டேசன் சென்ற இயக்க நிர்வாகிகள் மீது தாக்குதல் நடத்தி, பொய் வழக்குப்பதிவு செய்த காளையார்கோவில் போலீசார் மீது எஸ்பியிடம் கொடுக்கப்பட்ட புகார் அடிப்படையில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்சிவகங்கை மாவட்டத்தில் . பயிர் காப்பீடு செய்த அனைத்து விவசாயிகளுக்கும் தாமதிக்காமல் இழப்பீடு வழங்க வேண்டும் . மானாமதுரை அருகே பாப்பாங்குளத்தில் வீடுகள் இடிக்கப்பட்டதால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கி புதிய வீடு கட்டித்தர வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**வறட்சியால் கரும்பு சாகுபடி பாதிப்பு ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் வழங்க விவசாயிகள் கோரிக்கை கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்**

அரியலூர்அரிய லூர் மாவட்டம் சாத்தமங்கலம் கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு : உட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட கரும்பு பயிருக்கு ஏக்கருக்கு ரூ.40,000 நிவா ரணம் வழங்கிடக்கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் கரும்பு விவசாயிகள் சங்கம் சார்பில் அரியலூர் தாலுகா அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்ததும்கரும்பு விவசாய சங்க மாவட்ட செயலாளரு., மாநில குழு

உறுப்பினருமான மணியன் தலைமை வகித்து பேசினார்.
கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு கரும்பு விவசாய சங்க மாநில செய லாளர் காமராஜ் பேசுகை யில், வறட்சியின் காரண மாக கரும்பு விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்வசாயிகளுக்குளனவே பாதிக்கப்பட்ட கரும்பு வி . ஏக்கருக்கு ரூ.40,000 நிவாரணம் வழங்க வேண்டும் .3நாட்களுக்குள் பாதிக்கப்பட்ட கரும்பு பயிர்களை

கணக்கெடுத்து ஒரு வாரத்திற்குள் வறட்சி நிவா ரண பட்டியலை வெளியிடவேண்டும்.அதன் பின் நிவாரணம் வழங்க வேண் டும் என்றார் .
அகில இந்திய விவசாய சங்க மாவட்ட துணைத்தலைவர் பிச்சைபிள்ளை பேசுகையில், மாவட்ட தலைநகரமான அரியலூரில் பாதாள சாக்கடை பணியால் சாலைகள் மிக மோசமாக உள்ளன. மாவட்ட தலைமை மருத்துவமனை, அரியலூர் அரசு மருத்துவமனை எவ்வித அடிப்படை வசதியுமின்றி ஆரம்ப சுகாதார நிலையம் போல் உள்ளது ஒராண்டில் மாவட்டத்தில் .4 கலெக்டர்கள் மாறி விட்டனர் . அமைச்சர்களை மாற்றுவது போல தமிழக அரசு, அரியலூர் மாவட்ட கலெக்டர்களை மாற்றுகிறதுகுறைந்த பட்சம் பணிக்கு வரும் . கலெக்டரை ஒராண்டு இருக்குமாறு செய்ய வேண்டும் என்றார்விவசாய சங்க மாவட்ட . செயலாளர் செல்லதுரை, கரும்பு விவசாய சங்க மாவட்ட தலைவர் ஜெயபால், விவசாய சங்க வட்ட செயலாளர் வரபிரசாதம், கரும்பு விவசாய சங்க மாநில குழு உறுப்பினர் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்கரும்பு . விவசாயிகள் சங்க துணை தலைவர்கள் புண்ணியமூர்த்தி, நல்லதம்பி, யோகநாதன், தட்சணாமூர்த்தி, ஆரோக்கியசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கோரிக்கைகளை வலியுறுத்தி பேசிய நிர்வாகிகள், பின்னர் கலெக்டரை சந்தித்து மனு கொடுப்பதற்காக, அரியலூர் பஸ் நிலையத்தில் இருந்து ஊர்வலமாக கலெக்டர் அலுவலகம் சென்றனர்ஆனால் நுழைவாயில் முன் பகுதியில் .

அவர்களை தடுத்து நிறுத்திய போலீ சார் அனைவரையும் அனுமதிக்க முடியாது என்றும், குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே செல்ல அனுமதிக்க முடியும் என தடுத்து நிறுத்தி விட்டனர்.
பின்னர் சங்க நிர்வாகிகள், கலெக்டர் அலுவலகத்திற்குள் சென்று, அலுவலக மேலாளர்.அன்பழகனிடம் மனுக்களை கொடுத்தனர் (குற்றவியல்)
தாசில்தார் முருகன், இன்ஸ்பெக்டர் ராஜேஸ் வரி ஆகியோர் உடனிருந்தனர்.

**திருச்சியில் இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திருச்சிதிருச்சியில் இன்று விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் நடை : பெறுகிறது . ) திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் இன்று30ம் தேதி காலை (10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர்நாள் கூட்டம் கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமையில் நடை பெறுகிறதுகூட்டத்தில் விவசாயிகள் ., விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு வேளாண்மை சம்பந்தப்பட்ட கடனுதவிகள், விவசாய மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் குறித்து நேரிலோ அல்லது மனுக்கள் மூலமாகவோ தெரிவிக்கலாம். விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கலெக்டர் ஜெயஸ்ரீ கேட்டுக்கொண்டுள்ளார்.

**தென்னைக்கு விரைவில் வறட்சி நிவாரணம்**

பொள்ளாச்சி: பொள்ளாச்சி தாலுகாவிற்குட்பட்ட பகுதியில், வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னைகளுக்கு நிவாரணம் வழங்க இறுதி மதிப்பீட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதுவிரைவில் வறட்சி நிவாரணம் வழங்க நடவடிக்கை . எடுக்கப்படும் என்று, வருவாய்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி பகுதிகளில் தென்னை விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. சுற்றுவட்டார பகுதிகளான ஆனைமலை, கோட்டூர், சமத்தூர், ஒடையகுளம், ஆழியார், சேத்துமடை, கோபாலபுரம், கோமங்கலம், ராமபட்டிணம், வடக்கிபாளையம், நெகமம் உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில் தென்னை சாகுபடி அதிகளவில் உள்ளதுதென்னை . மரங்களை எப்படி பாதுக்காத்து உற்பத்தியை அதிகரிக்க செய்யவது குறித்து, வேளாண்மைதுறையினர் விவசாயிகளுக்கு

அறிவுரை கூறி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

சமீப காலமாக பொள்ளாச்சியை சுற்றியுள்ள கிராமங்களில் தென்னை வாடல் நோய் வேகமாக பரவி வருவது தெரிந்துள்ளதுஇதையடுத்து ., கிராமங்களுக்கு வேளா ண்மை அலுவலர்கள் நேரடியாக சென்று, வாடல் நோய் தாக்கியுள்ள தென்னைகளை கணக்கெடுக்கும் பணியை துவங்கினர்தாலுகாவில் . வடக்கு, தெற்கு மற்றும் ஆனைமலை ஒன்றிய கிராம பகுதிகளில் தென்னையில் நோய் தாக்கப் பட்டுள்ளதா என்று, ஆய்வு மேற்கொள்ளும் பணி நடந்தது.

இந்நிலையில் கடந்த ஆண்டில் மழைபொழிவின்றி வறட்சி ஏற்பட்டதால், தென்னை வாடல்நோய் கணக்கெடுப்பு பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டது . வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்கள் கணக்கெடுப்பு பணியில் வேளாண்மை அலுவலர்கள் ஈடுபட்டனர். தாலுகாவிற்குட்பட்ட வடக்கு வட்டாரத்தில் 21கிராமங்கள், தெற்கு வட்டாரத்தில் 51 கிராமங்கள், மற்றும் ஆனைமலை வட்டாரத்தில் 29 கிராமங்களில் தென்னை மற்றும் மானாவாரி என மொத்தம் 54ஆயிரத்து 869 ஏக்கர் விளைநிலங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கெடுப்பில் தெரியவந்தது.

இதில் தென்னை சாகுடி செய்த விவசாயிகளுக்கு.ரூ (ஒரு ஏக்கர்)4ஆயிரமும், மானாவாரி பயிர் சாகுடி செய்த விவசாயிளுக்கு ரூ.3ஆயிரம் என மொத்தம் 18 ஆயிரம் விவசாயிகளுக்கு ரூ.21கோடியே 94லட்சத்து 77ஆயிரத்து 240, வறட்சி நிவாரண தொகையாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டதுஆனால் . முதற்கட்டமாக, பயிர்வகை மற்றும் சிறுதானிய வகை சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மட்டுமே வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டதுத .ென்னை விவசாயிகளுக்கு இன்னும் வறட்சி நிவாரணம் வழங்கப்படவில்லை.

தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில், விவசாயிகளுக்கு தென்னை வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ள இந்நிலையில், கோவை மாவட்டத்தில் தென்னைகள் அதிகமுள்ள பொள்ளாச்சி பகுதியில் உள்ள தென்னை விவசாயிகளுக்கு உரிய வறட்சி நிவாரணம் இன்னும் வழங்கப்படாமல் உள்ளது . இது, விவசாயிகளுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதுதென்னைக்குண்டான .

வறட்சி நிவாரணத்தை வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

இதுகுறித்து வருவாய்துறை அதிகாரிகள் கூறுகையில், ‘பொள்ளாச்சி தாலுகாவிற்குட்பட்ட பகுதிகளில் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்கள் கணக்கெடுப்பு பணி முடிவடைந்துள்ளதுஇருப்பினும் தற்போது . மானாவாரி பயிர் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மட்டும், வறட்சி நிவாரணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

**பாலாற்றில் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை**

உடுமலை: நல்லார் அணை ஷட்டரை திறந்து பாலாற்றில் தண்ணீர் திறக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

உடுமலை அருகே தேவனூர்புதூர், ஆண்டியனூர் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளன . மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழையால் பெருக்கெடுத்து வரும் காட்டாறுகளின் உதவியால் இப்பகுதி மக்கள் விவசாயம் செய்து வருகின்றனர் . இந்த ஆறுகளை நம்பி 3500 ஏக்கர் நிலங்கள் உள்ளனஇந்த தண்ணீரை தேக்கி . பாலாற்றில் விட்டு விவசாயம் மேற்கொள்வதற்காக நல்லார் என்ற இடத்தில் 1984ம் ஆண்டில் அணை கட்டப்பட்டதுமலையில் இருந்து வ .ரும் தண்ணீர் நல்லார் அணையின் ஷட்டர் வழியாக வழிந்து பாலாற்றில் கலக்கும்அதை . .விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர் மேலும்தேவனூர்புதூர், எஸ்,நல்லூர்,ராவணாபுரம்,செல்லப்பம்பாளையம், அர்த்தநாரிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் 50க்கும் மேற்பட்ட கிராமங்களின் குடிநீர் தேவைக்கும் இத்தண்ணீர் பேருதவியாக இருந்தது.

இந்நிலையில், பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு வரும் கான்டூர் கால்வாய் நல்லார் அணையுடன் இணைக்கப்பட்டுள்ளதுதற்போது ., திருமூர்த்தி அணைக்கு கான்டூர் கால்வாயில் தண்ணீர் செல்கிறதுஅந்த தண்ணீ .ர் பாலாற்றில் வழிவதை தடுக்கும வகையில் நல்லார் அணையின் ஷட்டர் மூடப்பட்டுள்ளதுஇதனால் வழக்கமாக கிடைக்கும் . காட்டாறுகளின் தண்ணீர் கிடைக்காமல் அப்பகுதி விவசாயிகள் அவதிக்குள்ளாகி

உள்ளனர் .50க்கும் மேற் பட்ட கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள் ளதுஎன .வே தடையின்றி தங்களுக்கு கிடைத்து வந்த காட்டாற்றுகளின் தண்ணீர் கிடைக்கும் வகையில் நல் லார் அணையின் ஷட்டரை திறந்து விட வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை**

பொள்ளாச்சி பொள்ளாச்சி :நகர் மற்றும் கிராம புறங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை தற்போது அதிகமாக உள்ளதுவாய்சப்பை எனப்படும் கோமாரி . நோய் தாக்குதலில் இருந்து, காத்துக்கொள்ள கால்நடை களுக்கு, தடுப்பூசி போடும் பணியில் கால்நடை மருத்துவர்கள் ஈடுபடுகின்றனர்.

இதுகுறித்து கால்நடைதுறை டாக்டர் சசிகுமார் கூறுகையில், 'பொள்ளாச்சி நகரில் சுமார் 500க்கும் மேற்பட்ட மாடு மற்றும் எருமைகளும், 1500 ஆடு உள்ளிட்ட கால்நடைகள் உள்ளனஇந்த கால்நடைகளுக்கு கோமாரி நோயை தடுக்க . நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதுதற்போது குமரன்நகர் ., கோட்டாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்பட் டுள்ளதுமீதமுள்ள . பகுதிகளில் உள்ள கால்நடைகளுக்கு நேரடியாக சென்று தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்படுகிறதுகுளிர்காலங்களில் பசுமாடுகளுக்கு . கோமாரி நோய் தாக்கும் என்பதால், பசுமாடு வளர்ப்போர் தடுப்பூசி போட்டு அதனை காத்துக்கொள்ள வேண்டும்' என்றார்.

**ரூ. 2.54 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

பொள்ளாச்சிபொள்ளாச்சியை அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை : கூடத்தில், நேற்று விவசாயிகள் கொண்டுவந்த கொப்பரை ரூ.2.54 லட்சத்துக்கு ஏலம் போனது என அதிகாரி தெரிவித்தார் பொள்ளாச்சியை .அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், கொப்பரை ஏலம் நடைபெற்றதுநெகமம் ., காட்டம்பட்டி, ராசக்காபாளையம், சந்திராபுரம், சிறுகளந்தை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து 9 விவசாயிகள் மொத்தம் 104 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர் .92 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 12 மூட்டை இரண்டாம்

தர கொப்பரையாகவும் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன.
முதல் தர கொப்பரை ரூ.49.75 முதல் ரு.52.50 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ரூ.42.75 முதல் ரூ.44. 85 வரை ஏலம் போனதுவிவசாயிகள் கொண்டு . வந்த5.5 டன் கொப்பரை ரூ.2.54 லட்சத்துக்கு ஏலம்போனதுகடந்த இரண்டு . மாதங்களுக்கு பிறகு ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் விவசாயிகள் கொண்டு வந்த கொப்பரை அளவு, இந்த வாரம் அதிகமாக இருந்துள்ளதுமேலும் ., ஒரு கிலோவுக்கு ரூ .3 முதல் ரூ.4 வரை உயர்ந்துள்ளது என்று ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

**டெல்டாவில் மழை மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு நீர் திறப்பு குறைப்பு**



மேட்டூர் டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு : விநாடிக்கு18 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.
காவிரி நீர் பிடிப்பு பகுதியில் மழை பொழிவு குறைந்ததால் மேட்டூர் அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளது நேற்று மாலை .4 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 7,749 கனஅடி நீர் வந்ததுடெல்டா பாசனத்துக்காக அணையில் இருந்து கடந்த . சில நாட்களாக விநாடிக்கு 21 ஆயிரம் கனஅடி வரை நீர் வெளியேற்றப்பட்டது . தற்போது டெல்டா மாவட்டங்களில் மழை பெய்து வருவதால், விவசாயத்துக்கான நீர் தேவை குறைந்துள்ளது.

இதனால் மேட்டூர் அணையில் இருந்து வெளியேற்றப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டுள்ளதுஇதன் காரணமாக பாசனத்துக்கு திறக்கப்படும் . நீரின்

அளவு நேற்று மாலை வினாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டது. நேற்று மாலை 4 மணி நிலவரப்படி அணையின் நீர் மட்டம் 113.79 அடியாக இருந்தது. அணையில் நீர் இருப்பு 83.91 டிஎம்சி.

**நேரடி நெல் விதைப்பு வயல்களில் களை அழிப்பு பணி தீவிரம்**

காட்டுமன்னார்கோவில் பகுதியில் வடவாறு, வடக்கு ராஜன் வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் பாசனம் பெற்று விவசாய பணிகள் நடைபெறுகிறது . குறுவை சாகுபடிக்கு மேட்டூரிலிருந்து தண்ணீர் திறக்கப்படாததால் சம்பா சாகுபடி செய்வதற்கு விவசாயிகள் ஆயத்தப்படுத்தி வந்தனர்.
இந்நிலையில் கீழணையிலிருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது . இதை அறிந்த விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு பணியில் ஈடுபட்டனர்இந்த . பகுதியில் பெரியபுங்கநதி, குறுங்குடி, கண்டமங்கலம், வீரானந்தபுரம், மோவூர், முட்டம் என பெரும்பாலான பகுதிகளில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பு செய்தனர்.
தற்போது இவைகள் அனைத்தும் முளைத்து வந்துள்ளதால் பெண் தொழிலாளர்களை வைத்து களை அகற்றும் பணியில் மிக தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்நேரடி நெல் விதைப்பு . சாகுபடியில் களைகள் அதிகமாக காணப்படும்இவைகளை விவசாயிகள் தொடர்ந்து . கண்காணித்து அகற்றினால் மட்டுமே நடவு செய்த வயல்களில் கிடைக்கும் மகசூலை பெற முடியும். இதை கருத்தில் கொண்டு விவசாயிகள் மிக தீவிரமாக களைகள் அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் கூட்டம்**

ஈரோடு ஈரோடு மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர்க்கும் கூட்டம் இன்று :30ம் தேதி நடைபெற உள்ளதுகான்கிரீட் அமைக்க எதிர்ப கீழ்பவானி வாய்க்காலில் .ு தெரிவிக்கும் விவசாயிகளின் புகார்களை சமாளிக்கும் வகையில் புதிய நடைமுறை வகுக்கப்பட்டுள்ளதுஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் மாதந்தோறும் கடைசி . வெள்ளிக்கிழமை விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடத்தப்படுவது வாடிக்கையாகும் இன்று காலை .10 மணிக்கு தொடங்கும் இந்த கூட்டம் மதியம் 2

மணி வரை நீடிக்கும்விவசாய பிரதிநிதிகள் தெரிவிக்கும் புகார்கள் மற்றும் . கோரிக்கைகள் மீது சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் உரிய பதில் தெரிவிப்பது வழக்கமாகும்ஆனால் கீழ்பவானி வாய்க்காலில் கான்கிரீட் தளம் அமைக்கும் . விவகாரம் எழுந்த பிறகு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறும் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் நேரில் வந்து தங்களது எதிர்ப்புகளை பதிவு செய்து வருகின்றனர்.
எதிர்ப்பு விவசாயிகள் அதிக அளவில் கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை கூறுவதால் அதிகாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் இடையே ஒரு சில நேரங்களில் கடுமையான வாக்குவாதம் ஏற்படுகின்றது.

இதனால் குறைதீர்க்கும் கூட்டத்தை சமாளிக்க முடியாமல் மாவட்ட நிர்வாகம் திணறி வருகிறதுமேலும் கான்கிரீட் . தளம் அமைக்க குறிப்பிட்ட 2 விவசாய சங்கங்கள் ஆதரவு தெரிவித்து வருவதால் கூட்டத்தில் மோதல் உருவாகும் நிலையும் இருந்து வருகின்றதுஇதனால் ஒரு சில . நேரங்களில் போலீஸ் பாதுகாப்புடன் கூட்டத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதுஇந்நிலையில் . இந்த மாதம் முதல் குறைதீர்க்கும் கூட்டத்தில் புதிய நடைமுறையை மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது அதாவது காலை .11 மணி முதல் 11.30 மணி வரை விவசாயிகள் தங்களது குறைகள் தொடர்பான மனுக்களை வழங்கலாம் எனவும் பிறகு 11.30 மணிக்கு மேல் 12.30 மணிக்குள் விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்னைகள் குறித்து கருத்துக்களை தெரிவிக்கலாம் எனவும் இறுதியாக அதிகாரிகள் விளக்கம் அளிப்பார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**சம்பா சாகுபடிக்கு விதைகள் வினியோகம்**

கறம்பக்குடிகறம்பக்குடியில் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் : தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சம்பா சாகுபடிக்காக குறைந்த மானியத் தில் விநியோகம் செய்வதற்கு 26 மெட்ரிக் டன் விதைகளும், தனியார் விற் பனை நிலையங்களில் 99 மெட்ரிக் டன் விதைகளும், இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறதுவேளாண்மை விரிவாக்க மையங்களிலும் மட்டும் .

விநியோகம் செய்யப்பட்டு வந்த விதைகள் தற்போது தனியார் விதை விற்பனை நிலையங்களிலும் விற்பனை செய்யப்படுகிறதுமேலும் வேளாண்மை விரிவாக்க . மையம், தொடக்க வேளா ண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களிலும் 1 கிலோ விதை ரூ.5க்கு மானியமாக வழங்கப்பட்டு வருகிறது . எனவே தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மானியமாக வழங்கப்பட்டு வரும் இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகள் பயனடையலாம்இந்த தகவலை . கறம்பக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

**மானிய விலையில் விதைநெல் கேட்டு வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகள் முற்றுகை போராட்டம்**

தரங்கம்பாடி :மானிய விலையில் விதை நெல் கேட்டு அன்னப்பன்பேட்டை வேளாண் விரி வாக்க மையத்தை விவசாயிகள் முற்றுகையிட்டனர்.

மானிய விலையில் விதை நெல் வழங்கக்கோரி திருக்கடையூர் அடுத்த அன்னப்பன்பேட்டையில் உள்ள வேளாண் விரிவாக்க மையத்தை விவசாயிகள் முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்பாஜ மாவட்ட விவசாய அணி . செயலாளர் பிரபாகரன், ஒன்றிய செயலாளர் அகோரமூர்த்தி, தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, துணை செயலாளர் சிவராமன் மற்றும் கோவிந்தராஜ், தட்சிணாமூர்த்தி, பாஸ்கரன் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர் .அப்போது விவசாயிகளிடம் வேளாண் உதவி அலுவலர் உதயசூரியன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதையடுத்து மேல் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதுநாகை மாவட்ட . வேளாண் இயக்குனர் ராஜேந்திரன், செம்பனார்கோயில் வேளாண் உதவி இயக்குனர் வெற்றிவேலன் ஆகியோர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விவசாயிகளிடம் பேசினர்அப்போது வேறு . பகுதிகளில் இருந்து விதைநெல் எடுத்து வந்து விவசாயிகளுக்கு தருவதாக உறுதியளித்தனர்இதைதொடர்ந்து . இதைதொடர்ந்து .விவசாயிகள் கலைந்து சென்றனர் பாஜ விவசாய அணி மாவட்ட செயலாளர் பிரபாகரன் கூறியதாவதுமானிய விலையில் : விதைநெல் கொடுப்பதாக அரசு அறிவித்தது ஆனால் .75 சதவீத விவசாயிகளுக்கு மானிய விலையில் விதைநெல் கிடைக்கவில்லைவிதைநெல் இல்லாமல் விவசாய பணி .

தொடர முடியாமல் தடுமாறுகின்றனர்அரசு அறிவித்துள்ள மானியத்துடன் கூடிய . விதைநெல்லை அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடின்றி வழங்க வேண்டும் . அதற்கு அரசும் வேளாண்மை துறையும் நடவடிக்கை எடுக்க வேண் டும் என்றார்.

**பாலாற்றில் தண்ணீர் திறக்க விவசாயிகள் கோரிக்கை**

உடுமலை: உடுமலை அருகே தேவனூர்புதூர், ஆண்டியனூர் உள்ளிட்ட கிராமங்கள் உள்ளனமேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழையால் . பெருக்கெடுத்து வரும் காட்டாறுகளின் உதவியால் இப்பகுதி மக்கள் விவசாயம் செய்து வருகின்றனர்இந்த . ஆறுகளை நம்பி 3500 ஏக்கர் நிலங்கள் உள்ளனஇந்த . தண்ணீரை தேக்கி பாலாற்றில் விட்டு விவசாயம் மேற்கொள்வதற்காக நல்லார் என்ற இடத்தில் 1984ம் ஆண்டில் அணை கட்டப்பட்டது மலையில் இருந்து வரும் . தண்ணீர் நல்லார் அணையின் ஷட்டர் வழியாக வழிந்து பாலாற்றில் கலக்கும் . .அதை விவசாயிகள் பயன்படுத்தி வந்தனர் மேலும்தேவனூர்புதூர், எஸ்,நல்லூர்,ராவணாபுரம்,செல்லப்பம்பாளையம், அர்த்தநாரிபாளையம் ஆகிய ஊராட்சிகளில் 50க்கும் மேற்பட்ட கிராமங்களின் குடிநீர் தேவைக்கும் இத்தண்ணீர் பேருதவியாக இருந்தது.

இந்நிலையில், பரம்பிக்குளம் அணையில் இருந்து திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் கொண்டு வரும் கான்டூர் கால்வாய் நல்லார் அணையுடன் இணைக்கப்பட்டுள்ளதுதற்போது ., திருமூர்த்தி அணைக்கு கான்டூர் கால்வாயில் தண்ணீர் செல்கிறதுஅந்த தண்ணீர் . பாலாற்றில் வழிவதை தடுக்கும வகையில் நல்லார் அணையின் ஷட்டர் மூடப்பட்டுள்ளதுஇதனால் வழக்கமாக கிடைக்கும் . காட்டாறுகளின் தண்ணீர் கிடைக்காமல் அப்பகுதி விவசாயிகள் அவதிக்குள்ளாகி உள்ளனர் .50க்கும் மேற்பட்ட கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது . எனவே தடையின்றி தங்களுக்கு கிடைத்து வந்த காட்டாற்றுகளின் தண்ணீர் கிடைக்கும் வகையில் நல்லார் அணையின் ஷட்டரை திறந்து விட வேண்டுமென இப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு இதுவரை 56,000 லிட்டர் பால் கொள்முதல் புல் ரகங்களை வளர்க்க அழைப்பு**

கரூர்: கரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு இதுவரை 56,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.கரூர் மாவட்டம் குளித்தலை தாலுகாக்களில் கால்நடைத்துறையின் மூலம் கோ4 ரக புல் பயிரிடப்பட்டுள்ளது. புல் பயிரிடப்பட்டுள்ள நிலப்பகுதிகளை கரூர் கலெக்டர் ஜெயந்தி பார்வையிட்டார். பின்னர் அவர் பேசியதாவது,முதல்வர் வேளாண் துறையில் இரண்டாம் பசுமை புரட்சியை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். பால் உற்பத்தியையும் அதிகரித்து வெண்ணெய் புரட்சியை உருவாக்கும் நோக்கத்துடன் கால்நடை பராமரிப்புத்துறையின் மூலம் பால் உற்பத்திக்கு தேவையான உதவிகளை முழு மானியத்துடன் வழங்க உத்தரவிட்டுள்ளார்.
பால் உற்பத்தி அதிகரிக்கும் நோக்கில் ஒரு ஏக்கர் பரப்பளவில் கோ-4 ரகபுல் பயிரிட தமிழக அரசு மாநில தீவன புல் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முழுமானியம் ரூ.12,000 வழங்கி வருகிறது. இதன் மூலம் ஒவ்வொரு விவசாயியும் திட்டமிட்ட பணிகளை மேற்கொள்வதுடன் புல் வளர்ப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இத்திட்டத்தின் மூலம் கடந்த 2011-12ம் ஆண்டில் கரூர் மாவட்டத்தில் 220 ஏக்கரில் கரூர், குளித்தலை தாலுகாவில் விவசாயிகள் கோ 4 ரக புல் பயிரிட்டு அரசு மானியம் பெற்றனர். பால் உற்பத்தியும் அதிகரித்து லாபம் பெற்றனர். தற்போது 2012-13ம் ஆண்டுக்கு கரூர், குளித்தலை தாலுகாவில் 500 ஏக்கரில் கோ 4 ரக புல் பயிரிட்டு உற்பத்தியை பெருக்கியது மட்டுமின்றி வறட்சி நிலையையும் சமாளித்து பால் உற்பத்தியில் இந்தாண்டு 56,000 லிட்டர் வரை கொள்முதல் செய்து வெண்மை புரட்சியை ஏற்படுத்தியுள்ளனர்.கோ 4 ரக புல் கறவை மாடுகளுக்கு வழங்குவதால் முழுமையான எதிர்ப்பு சக்தி மற்றும் பசுமையான தீவனங்கள் கிடைக்கிறது. ஒவ்வொரு கால்நடையும் ஆரோக்கியமான வளர்ச்சியை பெருக்குவதுடன் பால் உற்பத்தி திறனும் அதிகரிக்கிறது. மேலும் கோ4 ரக புல் பயிரிட தனியாக நிலப்பகுதிகளை ஒதுக்க வேண்டாம்.

விவசாயிகள் நில பகுதியின் ஓரங்கள் மற்றும் தென்னை, மா போன்ற வகை பயிரிட்ட நில பகுதிகளில் பயிரிட்டாலே போதுமானதாகும். இதற்கு பராமரிப்பு செலவு மிகவும் குறைவு. மேலும் வீட்டில் பெண்களுக்கு இது ஒரு சுய தொழிலாக உருவாக்கி கொண்டு கறவை மாடுகள் வளர்த்தால் அதன்மூலம் பால்உற்பத்தி அதிகரிப்பதுடன் குடும்பத்தின் பொருளாதாரமும் உயரும். மேலும் பால்

உற்பத்தியின் மூலம் மாவட்டத்தின் வளர்ச்சிக்கும் பயன் உள்ளதாக இருந்து வருவதுடன் மானியத்தை பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை பெருக்கி கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

30.08.2013

**ஊத்துக்கோட்டை அருகே கரும்பு தோட்டம் எரிந்து நாசம்**

ஊத்துக்கோட்டை,

ஊத்துக்கோட்டை சாவடித்தெஜவை சேர்ந்தவர் ஜெயராமன் (வயது 50). விவசாயி. இவரது தம்பி நாராயணமூர்த்தி (45). இவர்கள் இருவரும் பால்ரெட்டிகண்டிகை கிராமத்தில் 11 ஏக்கர் நிலப்பரப்பில் கரும்பு பயிரிட்டுள்ளனர். ஜெயராமன் கடந்த வாரம் சுமார் 1 ஏக்கர் கரும்பு தோட்டத்தை அறுவடை செய்தார். அங்கிருந்த குப்பைக்கு நேற்று முன்தினம் மாலை தீ வைத்தார். அப்போது காற்று பலமாக வீசியதால் பக்கத்தில் உள்ள கரும்பு தோட்டத்துக்கு தீ பிடித்து கொண்டது. இது குறித்து திருவள்ளூர் தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீயை கட்டுப்படுத்துவதற்குள் அறுவடைக்கு தயாராக இருந்த 11 ஏக்கர் கரும்பு தோட்டம் முழுவதுமாக எரிந்து சாம்பல் ஆனது. இது குறித்து ஊத்துக்கோட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.